# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

### மானியக் கோரிக்கை எண். 36


## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | முக்கிய நடவடிக்கைகள் | 5 |
| 3. | துறையின் செயல்பாடுகள் | 10 |
| 4. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 10 |
| 5. | ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது | 41 |
| 6. | சிறப்பு முயற்சிகள் | 50 |
| 7. | இருபது அம்சத் திட்டம், 2006 | 51 |
| 8. | முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் | 52 |
| 9. | துறைத் தலைவர்கள் | 54 |
| 10. | மாநில திட்டக்குழு | 55 |
| 11. | பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை | 87 |
| 12. | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை | 154 |
| 13. | சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 168 |
| 14. | சென்னை மெட்ரோ இரயில் திட்டம் | 173 |

## மானியக் கோரிக்கை எண்.36

## திட்டம், வளர்ச்சி மற்றும்

## சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை**

*"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*

*எய்த உணர்ந்து செயல்"*

*(திருக்குறள் 516)*

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும், மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்வதற்காகவும் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை முதலில் உருவாக்கப்பட்டது. மத்திய திட்டக்குழு கலைக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக

சேர்க்கப்பட்டதால், இத்துறையின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ் நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்த தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் அம்முயற்சிகளில் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகிய மாற்றங்களை உருவாக்குவதே இத்துறையின் பங்காகும். முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் மாநிலத் திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளை வகுக்கிறது. மேலும், இத்துறை மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான நித்தி ஆயோக் (NITI Aayog) உடன்

கலந்துரையாடும் மாநில அரசின் ஒருங்கிணைப்புத் துறையாகும்.

நித்தி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் முன்னெடுக்கப்பட்ட பிறகு, திட்டங்களை தயாரித்தல் மற்றும் செலவினங்களை கண்காணித்தல் ஆகிய செயல்பாடுகள், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை உள்ளடக்கிய பிரபஞ்ச வெளிப்பாடுடன் உலகளாவிய தரத்திற்கு 'நாம் விரும்பும் எதிர்காலத்தை' நோக்கி செயல்படும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் கவனம் செலுத்துவதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்கினை அடைவதற்கான சிந்தனை மற்றும் முன்னேற்றத்தை அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைந்து இத்துறை கண்காணிக்கிறது.

இத்துறை, இ–சமிக்ஷா மற்றும் பிரகதி (PRAGATI–Pro–Active Governance and Timely Implementation) வலைதளம் வாயிலாக நித்தி ஆயோக் (NITI Aayog) மற்றும் ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து

கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும். இதன்மூலம் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடி திட்டங்களை நேரடியாக விவாதித்து அறிந்து கொள்கிறார். மேலும், பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்படும் திட்டங்கள் குறித்த நடப்பு நிலை பிரகதியின் (PRAGATI) வலைதளத்தில் இத்துறையால் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்படுகிறது. மேலும், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி வழியாக ஆதாரங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப திட்ட செயலாகக்கம் அளிக்கிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் மேற்பார்வையிடப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மற்றும் சில புதிய சிறப்பு முயற்சிகளான (New Special Initiatives) முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின்

முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

துறையின் வலைத்தளமான www.tn.gov.in/department/23–இல் இத்துறையின் செயல்பாடுகள் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

**1.0 முக்கிய நடவடிக்கைகள்**

i. "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை" 2030–ல் அடைய மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல்;

ii. நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டுடன் தொடர்புடைய பெரிய திட்டங்களை அளவிடுதல், இணைத்தல் மற்றும் கண்காணித்து மதிப்பீடு செய்தல்;

iii. மாநில திட்டக் குழு மூலமாக நீண்ட மற்றும் நடுத்தர கால செயல் உத்திகளை வகுத்தல்;

iv. நித்தி ஆயோக் (NITI Aayog) அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

v. மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்த திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்றுமாசடைதல், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;

vi. மாநில அளவில் முன்னேற விழையும் மாவட்டங்களுக்கான திட்டத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்;

vii. பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல்;

viii. தமிழ்நாடு புத்தாக்க முயற்சியின்கீழ் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்;

ix. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

x. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை உருவாக்கி மேற்பார்வையிடுதல்;

xi. ரூ.100 கோடிக்கு மேலான பெரிய உள் கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றத்தை சீராய்வு செய்தல்;

xii. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்;

xiii. வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாக மதிப்பீடு செய்தல்;

xiv. மாநில திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல் படுவதற்கான நிர்வாக வசதிகள் செய்தல்;

xv. இருபது அம்சத்திட்டத்தின் கீழ் பல்வேறு துறை மற்றும் நிறுவனங்களில் செயல்படுத்தப்படும் கண்காணிக்கப்பட வேண்டிய திட்டங்களை சேகரித்தல் ஒருங்கிணைத்தல்;

xvi. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலம் பொது மற்றும் தனியார் துறைகளிடமிருந்து, மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம் குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து புள்ளி

விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;

xvii. மாநிலத்தின் பல்வேறு முக்கிய பிரச்சனைகள் தொடர்பாக, மாநில அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து கோரிக்கை மனு தயாரித்து ஒன்றிய அரசுக்கும் தொடர்புடைய அமைச்சகங்களுக்கும் வழங்குதல்;

xviii. சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

xix. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் 'மெட்ரோ இரயில் திட்டம்' போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்; மற்றும் புதிய சிறப்பு முயற்சிகளாக முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள்

### 2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான உலகளாவிய பிரண்ட்லேண்ட் அறிக்கை (Brundtland Report): நமது பொதுவான எதிர்காலம், நீடித்த வளர்ச்சியை பின்வருமாறு வரையறுக்கிறது: "எதிர்கால சந்ததியினர் தங்கள் சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனை சமரசம் செய்யாமல் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வளர்ச்சி." இதுவே, சர்வதேச ஒத்துழைப்புக்கான உலகளாவிய கட்டமைப்பிற்கு அடித்தளமாக 2030-ஆம் ஆண்டின் நீடித்த வளர்ச்சி செயல் திட்டம் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDGs) உள்ளன. ஐக்கிய நாடுகள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் கட்டமைப்பில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது – நீடித்த வளர்ச்சி இலக்குகளை உலக அளவிலிருந்து உள்ளூர் அளவு வரை கொண்டு சேர்ப்பதற்கும் மற்றும் உள்ளூர்மயமாக்கல் செயல்முறை அடையக்கூடிய

இலக்குகள் குறித்த உலகளாவிய ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாகும்.

- **முகவுரை**

நீடித்த வளர்ச்சி இலக்குகள் என்பது முன்னிகழ்வற்ற செயல் திட்டத்தின் நோக்கமாகவும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்தாகவும் அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் அனைவருக்கும் பொருந்தும், வெவ்வேறு மாநில யதார்த்தங்கள், திறன்கள் மற்றும் வளர்ச்சியின் நிலைகள் மற்றும் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு மதிப்பளிக்கும் தன்மையை கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவை உலகளாவிய இலக்குகளாக, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கும் பொருந்தக்கூடியத் தன்மையையும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறப்பினையும் பெற்றுள்ளது. இந்த இலக்குகள் யாவும் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்தத் தன்மையுடையதாகவும் மற்றும் ஒன்றிலிருந்து பிறிதொன்றை பிரிக்க இயலாததாகவும் உள்ளதோடு,

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மூன்று பரிமாணங்களான, சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை சரிசமமாக உள்ளடக்கியுள்ளது. "மக்களாகிய நாங்கள்" என்பது ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தின் புகழ்பெற்ற தொடக்க வார்த்தையாக கொண்டாடப்படுகிறது. "மக்களாகிய நாங்கள்" என்பது, 2030-ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கான பாதையை நிர்ணயம் செய்வதில் ஈடுபட வேண்டிய அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பழங்குடியினர், குடிமை சமூகம், வணிகம், தனியார் துறை நிறுவனங்கள், கல்விச் சமூகங்கள் மற்றும் பிற அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. 2020-ஆம் ஆண்டு முதல் 2030-ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டு காலம், செயல்பாட்டிற்கான பத்தாண்டு காலமாக (தசாப்தமாக) அறிவிக்கப்படுவதுடன், வறுமை மற்றும் பாலினச் சமத்துவம் முதல் பருவ நிலை மாற்றம்,

சமத்துவமின்மை மற்றும் நிதிப்பற்றாக்குறை உள்ளிட்ட உலகத்தின் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்வதற்கான நீடித்த தீர்வை எய்வதுவதற்கான வழிவகைகளை துரிதப்படுத்துதலை முன்னிறுத்துகிறது. கொரனோவுக்கு பிந்தைய, இக்காலத்தில் மறுகட்டமைப்பு செயல்பாட்டில் மாநில அரசானது, சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் கொள்கைகளை அடிப்படையாக கொண்டு, நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் முனைப்பாக உள்ளது.

### 2.1.1 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து முக்கிய கொள்கைகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளானது, அதன் ஐந்து முக்கிய கொள்கைகளின் மீதே கட்டமைக்கப் பட்டுள்ளன. சமூக நீதியை உள்ளடக்கி மற்றும் ஒருவரும் விடுபடா **கூட்டாண்மை**களுடன் **அமைதி**யான முறையில் **செழிப்பை** அடைய, உழைக்கும் பங்குதாரர்களான **மக்களால்** எதிர்கால சந்ததியினருக்காக **புவி** பாதுகாக்கப்பட வேண்டும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை மையமாகக் கொண்ட முயற்சிகள் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தினை கண்காணிப்பதால் ஏற்படும் நன்மைகள் ஆகியன, பல்வேறு வகைகளில் முன்னேற்றத்தை சீர்குலைத்த உலகளாவிய பெருந்தொற்றுக்கு பிந்தைய காலத்தில் சிறந்த முறையில் மீண்டும் உருவாக்குவதற்கான வழிவகைகளை பட்டியலிடுவது இன்றைய உலகிற்கு குறிப்பாக பொருந்துகிறது. இதே வழியில், அனைத்து பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்படும் கூட்டாண்மையின் மூலம் கட்டமைக்கப்பட்ட "**முழு சமூக**" அணுகுமுறையின் வாயிலாக, ஒரு முறையான செயல் திட்டத்தின் மூலம் மீண்டும் வளர்ச்சியை மறு கட்டமைப்பு செய்திடும் முயற்சிகளில் நீடித்த வளர்ச்சித் தன்மையினை மையப்படுத்தி மாநில அரசு பாடுபடுகிறது.

## 2.1.2 உலக அளவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகளின் பொது மன்ற மாநாடு கூட்டப்படுகிறது. அனைத்து நாடுகளின் அடைவுகள் தரவுகள் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கையை வெளியிடுகிறது. 2021–ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையின்படி, 162 உலக நாடுகளில் இந்தியா 120 ஆவது நிலையில் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உலகளாவிய குறிகாட்டிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு இத்தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு நாடும் மேற்கொண்ட முயற்சிகளையும், அடைந்த முன்னேற்றத்தினையும், தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் அவையின் உயர்நிலை அரசியல் குழுவில் சமர்ப்பிக்கிறது. ஐக்கிய நாடுகளின் இம்முயற்சி உலக நாடுகளுக்கு நீடித்த

வளர்ச்சி இலக்குகளை அடைய மேற்கொண்ட முயற்சிகளை தெரிவிக்கும் வாய்ப்பாக அமைகிறது.

### 2.1.3 தேசிய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் – நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்பாட்டினால் உண்டான முன்னேற்றத்தை அறிந்திடும் வகையில் அவற்றினை தரவரிசைப்படுத்த, நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு எனும் ஆவண வெளியீடு 2018–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்படி, 2030–ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் எட்டப்படுவதை கண்காணிப்பதற்கான முக்கியமான ஒரு கருவியாக இந்த குறியீடு இருந்து வருகிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான போட்டி மனப்பான்மையை வளர்க்கும் நோக்கத்துடன், நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான கொள்கை உரையாடல்கள், கொள்கை உருவாக்கம் மற்றும் பல்வேறு துறைகளிடையேயும் குடிமைச்

சமுதாயத்தினரிடையேயும் இக்கொள்கைகளை செயல்படுத்துதல் ஆகியவற்றிற்காக, நீடித்த வளர்ச்சி இலக்குகளை முன்னிலைப்படுத்துவதில் இக்குறியீடு முக்கிய கருவியாக திகழ்கிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய அடிப்படை ஆய்வு குறியீட்டில் இம்மாநிலம் 66 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடத்தில் இருந்தது. 2019–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இக்குறியீட்டின் இரண்டாம் பதிப்பில் ஒரு மதிப்பெண் அதிகம் பெற்று 67 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டது. மேலும், மேம்படுத்தப்பட்ட, தரவேற்றப்பட்ட மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட 2020–21 ஆம் ஆண்டின் குறியீட்டின் மூன்றாம் பதிப்பில் உள்ள இலக்குகளும் மற்றும் தற்போது கிடைக்கக்கூடிய தரவுகளுடன் அதிக எண்ணிக்கையிலான உலகளாவிய இலக்குகளும் மாநிலத்தை 74 மதிப்பெண்கள் பெற செய்து இரண்டாம் இடத்தில் வைத்துள்ளது.

### 2.1.4 தமிழ்நாடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

தமிழ்நாடு அரசு, அதனுடைய அடிப்படை கொள்கையான "அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச் செய்தல்" என்பதை செயல்படுத்துவதில் உறுதியுடன் உள்ளது. மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, பல்வேறு முயற்சிகளையும் செயலாக்கி வருகின்றது. மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளில் ஒருவரும் விடுபடா வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதில் கவனம் செலுத்துவதும் மற்றும் செயல்பாட்டிற்கான பத்தாண்டு காலத்திற்கான வளர்ச்சிக்கான பணிகளும் மற்றும் அதற்கான முன்னேற்றப் பணிகளும் ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான வரையறையுடன் பொருந்தியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பல்வேறு வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஏற்படுத்த இயலுவதோடு, செழிப்பான தமிழகத்தை உருவாக்க இயலும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய விடியலுக்கான தொலைநோக்கு ஆவணத்தில், பொருளாதாரம், வேளாண்மை, நீர் ஆதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு, மருத்துவம், நகர்ப்புற வளர்ச்சி, உயர்தர ஊரக கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சமூக நீதி ஆகிய ஏழு பெரிய துறைகள் கண்டறியப்பட்டுள்ளன. மாநிலம், அதன் துரிதப்பட்ட, முழுமையான மற்றும் மாநிலத்தில் ஒருவரும் விடுபடா வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் முனைப்புடன் இருக்கும் போது நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ்வரும் 16 இலக்குகளும் தானாகவே எய்தப்பட இயலும்.

அனைத்து துறைகளும் தத்தம் கொள்கை விளக்கக் குறிப்பில் தமக்கு தொடர்புடைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விளக்கம் இடம் பெற வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டன. மேலும், தமிழ்நாடு அகில இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் முதல் இடத்தை பெறுவதோடு, உலக அளவில் தனது தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம்

அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து தமது செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உலகநாடுகள் முழுமையாக எய்துவதற்கு இந்தியாவும் அதனை முழுமையாக அடைய வேண்டும். இந்தியா இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழகம் அனைத்து இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதில் முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும்.

**2.1.5 செயல்பாட்டிற்கான அமைப்புமுறை**

**நிறுவனக்கட்டமைப்பு**

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை நீடித்த வளர்ச்சி இலக்கினை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு அமைப்பாகவும், அதன் கீழுள்ள மாநில திட்டக்குழு இப்பொருள் தொடர்பான, கொள்கை அளவிலான விவாதங்களின் மூலம் அரசுக்கு கருத்துரு வழங்கும் பொறுப்பினையும், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையானது நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான தரவுகளை

பெறுவது, ஒருங்கிணைப்பது தொடர்பான பணிகளுக்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

### 2.1.6 கண்காணித்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் உள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடுத்த பத்தாண்டுகளில் அடைவதற்காக தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை வகுத்தல் மற்றும் ஆய்வு செய்தல் உள்ளிட்டவை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் முதன்மைப் பொறுப்பாகும், நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநில அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உலக மற்றும் தேசிய அளவில் வரையறை செய்யப்பட்டவாறு உள்ளனவா என்பதை பல்வேறு நிலையில் முறையாக கண்காணித்து ஆய்வு செய்து குடிமக்கள் அறிந்திடும் வகையில் வழங்கப்படுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகள் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் குறித்து பல்வேறு துறை அரசுச் செயலாளர்களின் கீழுள்ள பணிக்குழுக்களும், மாநில திட்டக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்களும் கலந்துரையாடுவார்கள். திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் கீழுள்ள மாநிலத் திட்டக்குழு,

நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்வதற்கான கொள்கை ஒத்திசைவிற்கு பொறுப்பாகும்.

### 2.1.7 நீடித்த வளர்ச்சி இலக்குகள் இணைய கண்காணிப்பு பலகை

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளுக்கான தரவுகளை அந்தந்த துறைகள், இணையத்தில் பதிவேற்றவும், முன்னேற்றதைக் கண்காணிக்கவும் பிரத்தியேக இணையதள கண்காணிப்பு பலகை வடிவமைக்கப்பட்டுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்கில் அடுத்த இந்திய தரவரிசை குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நீடித்த வளர்ச்சி இலக்கில் தமிழக அரசால் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் பணிகள் தொடரும்.

### 2.1.8 குறிகாட்டிகள் வரையறை

கண்காணிப்புப் பணிகளுக்கு உதவும் வகையில் குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தரம், அணுகக்கூடிய, சரியான நேரத்தில் மற்றும் நம்பகமான பிரிக்கப்பட்ட தரவு, முன்னேற்றத்தை அளவிடுவதற்கு உதவுவதற்கும் மற்றும் ஒருவரும் விடுபடா வண்ணம் உறுதி செய்வதற்கும் இக்குறிகாட்டியின் தனிப்பட்ட

தளத்தில் சேகரிக்கப்படுகிறது. இத்தரவுகள் திட்டங்கள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்கான முக்கிய கருவியாகவும் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தைப் புரிந்துக் கொள்ளத் தக்க இடங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தரவுகள் பெறுவதற்கான வழிமுறையாகவும் இக்குறிகாட்டிகளின் வரையறை பயன்படுகிறது.

- **மாநில அளவில் உள்ளூர் மயமாக்கல்**

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாநிலத்தின் அர்ப்பணிப்பு வலுவானது மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பல உரைகளில் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் பெரும்பாலானவற்றை உள்ளடக்கிய மற்றும் அவற்றின் உள்ளீடுகளின் ஐந்து முக்கிய கொள்கைகளில் வேரூன்றிய முக்கிய துறைகளை அறிவித்துள்ளார். தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் வளமான வாய்ப்புகள் மற்றும் உயர்தர கிராமப்புற உள்கட்டமைப்பு, அதிகரித்த மகசூல், மகிழ்ச்சியான விவசாயிகள் மற்றும் உயர் வாழ்க்கைத் தரம் ஆகியவை மாநிலத்தின் அமைதி

மற்றும் செழுமைக்கு வழிவகுக்கும். அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வசதி அளித்தல், உயர் தரமான கல்வி மற்றும் அனைவருக்கும் தரமான மருத்துவம் உள்ளிட்ட இலக்குகள் மாநிலத்தில் வசிக்கும் மக்களின் பெரும் நன்மை பயப்பதாக அமைகிறது. தமிழகத்தை அழகான மாநிலமாக உருவாக்குவதற்கான கண்ணோட்டமானது, மாநிலத்தை அதன் செழுமையான பாரம்பரியம், வரலாறு, பண்பாடு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியன இந்த புவி கிரகத்தின் மீதான அக்கறையை பிரதிபலிக்கிறது. 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தைக் கூட்டாண்மை முறையில் எட்டுவதற்கான உயர் வளர்ச்சிப் பாதையில், நீடித்த வளர்ச்சி இலக்குகளில் ஒருவரும் விடுபடா வண்ணம் தமிழ்நாடு அரசு பணிகளைத் தொடர்கிறது.

- **மாவட்ட அளவில் உள்ளூர் மயமாக்கல்**

மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்

அவர்களின் தலைமையின் கீழ் மாவட்ட உயர்மட்ட குழுவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் மாவட்ட அளவிலான செயற்குழுவும் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்குகள் பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் மற்றும் பிரிவுகள் மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட குறிகாட்டிகள் வரையறையின் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பல்வேறு குறிகாட்டிகளில் உள்ள செயல்பாட்டின் அடிப்படையில் மாவட்டங்கள் தரவரிசைப்படுத்தப்பட உள்ளன. இத்துறை மாவட்டக் குறிகாட்டிகள் வரையறையின் தரவரிசை அடிப்படை அறிக்கையை வெளியிடுவதுடன், முக்கியமான குறிகாட்டிகளில் மாவட்டங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கும்.

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையானது ஜெர்மன் நிறுவனமான GIZ உடன் இணைந்து நகர்ப்புறங்களில் இருந்து நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மேம்பட்ட தரவுகள் சேகரித்தல், செயல்படுத்தல், திறம்பட கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு நகர்ப்புற குறிகாட்டிகள் வரையறை (UIF) உருவாக்கி வருகிறது. நகர்ப்புறங்களில் வசிப்பவர்களில் கிட்டத்தட்ட 50% மக்களைக் கொண்ட மாநிலம் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக இருப்பதால், முக்கிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறிகாட்டிகளின் முன்னேற்றத்தை தரப்படுத்தவும், கண்காணிக்கவும் நகர்ப்புற குறிகாட்டிகள் வரையறை (UIF)) விரைவில் தமிழ்நாட்டின் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

மாநில அரசின் தொலைநோக்குப் பார்வை உள்ளடக்கிய மற்றும் சமத்துவமான வளர்ச்சிக்கான மற்றும் ஒருவரும் விடுபடா வண்ணம் (LNOB) என்ற உலகளாவிய பார்வைக்கு இணங்க, திட்டம் மற்றும்

வளர்ச்சி துறையானது GIZ மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து மீள்குடியேற்றக் குறிகாட்டிகள் வரையறை (RIF) இறுதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது மற்றும் மீள்குடியேற்றங்களில் அத்தியாவசிய சேவைகள் சென்றடைவதைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

- **நீடித்த வளர்ச்சி இலக்குகளில் இந்திய குறியீட்டின்படி, கவனம் செலுத்தப்பட வேண்டிய குறிகாட்டிகள்**

திட்டம் மற்றும் வளர்ச்சி துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்தியக் குறியீடு வெளியிடப்படுவதைத் தொடர்ந்து, அதில் எந்தெந்த குறிகாட்டிகளில் மாநிலத்தின் செயல்திறன் குறைவாக உள்ளது என்பதை அறிந்து, அந்தந்த துறைகளின் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, இக்குறிகாட்டிகளின் செயல்திறனில் அத்துறையின் சிறப்பு கவனம் செலுத்தக் கோரப்படுவதுடன் மற்றும் மாநிலத்தின் செயல்திறனை தேசிய அளவில்

உயர்த்துவதற்காக உரிய திட்டங்களின் வாயிலாக புதிய உத்திகளை வகுத்திடவும் வலியுறுத்துகிறது. மாநிலத்தில், ஊட்டச் சத்துக்குறைபாடு மற்றும் கற்றல் திறன் வெளிப்பாடு ஆகியவற்றில் தொடர் கலந்தாய்வுக் கூட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது.

### 2.1.9 பற்பரிமாண வறுமைக் குறியீடு மற்றும் மாநில சீர்திருத்த செயல் திட்டம்

- **நித்தி ஆயோக் (NITI AAYOG) உடனான கலந்தாய்வு**

நித்தி ஆயோக் மாநிலங்களுடனான கலந்தாய்வு கூட்டங்களின் ஒரு பகுதியாக இரண்டு கலந்தாய்வுகள் இம்மாநிலத்துடன் நடத்தியது. இந்திய குறியீடு 3.0–இல் (2020–21) தமிழ்நாட்டின் முன்னேற்றம் குறித்தும் மற்றொன்று NFHS–4ஐ அடிப்படையாகக் கொண்ட பற்பரிமாண வறுமைக் குறியீட்டின் முன்வெளியீடு விவாதமாக அமைந்தது. தற்போது, NFHS–5 அடிப்படையில் இது திருத்தப்பட்டு வருகிறது.

- **பற்பரிமாண வறுமைக் குறியீடு**

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் முதல் இலக்கான வறுமை ஒழிப்பு இலக்கின் கீழ் வரும் குறிக்கோள் 1.2 ஆனது, தேசிய வரையறையின்படி, அனைத்து பரிமாணங்களிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் அனைத்து வயதிலும் உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் சதவீதத்தை குறைந்த பட்சம் சரிபாதியாக குறைப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்கின் கீழ்வரும் இலக்குகளின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இயல்புகள், பற்பரிமாண வறுமை குறியீட்டில் வெளிப்படுவதை, இக்குறியீடு ஊட்டச்சத்தான உணவு இன்மை (இலக்கு–2), உடல் நலம் (இலக்கு–3), கல்வி (இலக்கு–4) மற்றும் வாழ்க்கை தரத்தை வெளிப்படுத்தும் இதர குறிகாட்டிகளான குடிநீர் மற்றும் சுகாதாரம் (இலக்கு–6) மற்றும் மின் நுகர்வு மற்றும் தூய்மையான எரிபொருள் (இலக்கு–7) உள்ளிட்ட அம்சங்களில் மக்களின் ஏழ்மையினை அளவிடுவதன் வாயிலாக

அறியலாம். இந்த பற்பரிமாண வறுமை குறியீடு, ஒரு தனிநபர் மற்றும் அதன் விரிவாக ஒரு குடும்பம் ஏழ்மையின் பற்பரிமாணங்களை சந்திப்பதை எடுத்துக் காட்டுகிறது. பற்பரிமாண வறுமைக் குறியீட்டின் அடிப்படை அறிக்கை தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 4–இல் உள்ள தரவுகளைக் கொண்டு கணக்கிடப்பட்டதாகும். இதன்படி, தமிழ்நாடு மாநிலங்கள் அளவில் 0.02 சதவீதம் எனும் புள்ளிகளுடன் நான்காவது குறைந்த ஏழ்மைத்தரம் கொண்ட மாநிலமாக உள்ளது. மாநிலத்தின் தலை எண்ணிக்கை (Head Count) விகிதம் 4.89% மற்றும் வறுமையின் தீவிரம் (Poverty Intensity) 39.97% என மதிப்பிடப்பட்டுள்ளது.

- **மாநில சீர்திருத்த செயல்திட்டம்**

பற்பரிமாண வறுமைக் குறியீட்டின் சில முக்கியமான முயற்சிகளுக்கு மாநிலத்திற்கு உதவிடும் வகையிலான ஒரு றிந்த கருவியே மாநில சீர்திருத்த செயல் திட்டமாகும். இரண்டு தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்புகளுக்கு இடையே வறுமை

ஒழிப்பிற்கான செயல் திட்டத்தில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்காகவும் மற்றும் அதன் நல்விளைவுகளை அதிகரித்திடும் வண்ணம் ஏழ்மை சூழ்நிலையை குறைப்பதற்காகவும், அரசின் சிறப்பு கவனம் அத்தியாவசியமாகிறது. மாநிலச் சீர்திருத்த செயல் திட்டம், ஒவ்வொரு தேசிய பற்பரிமாண வறுமைக் குறியீட்டின் குறிகாட்டிக்கும் பற்பரிமாண வறுமைக் குறியீட்டில் உள்ள சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரத்தின் விளைவுகளில் நேரடித் தாக்கத்தைக் கொண்ட அரசு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை இணைக்கிறது.

பின்னர் இச்செயல்திட்டம், மாநிலத்தின் பற்பரிமாண வறுமைக் குறியீட்டினை முன்னேற்றுவதற்காக, குறைவான செயல்பாடு கொண்ட குறிகாட்டிகளின் மீதான திறனை உயர்த்துவதற்காக உதவுகிறது. மாநில பற்பரிமாண வறுமைக் குறியீடு நிலைமையை மேம்படுத்துவதற்கான, மாநில சீர்திருத்த செயல் திட்டமானது, தொடர்புடைய துறைகளுடனான தொடர்

ஆலோசனைக் கூட்டங்களின் வாயிலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 2.1.10 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக மாநிலத்தின் சிறப்புப் பணிகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் குறிகாட்டிகளை மேம்படுத்துவதற்கும், இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எட்டுவதற்காகவும் மாநில அரசு அண்மைக் காலமாக நிரல்சார்ந்த அணுகுமுறையை துவக்கியுள்ளது.

➢ **நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக துறைகளின் பங்களிப்பு**

ஒவ்வொரு துறைகளிலும் அமைக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகள், அத்துறைச் சார்ந்த குறிகாட்டிகளின் மீதான செயல்பாடுகளை மேம்படுத்தவும், அவற்றை தொடர்ந்து கண்காணிக்கவும், அவற்றின் முன்னேற்றத்தை அறியவும், அவற்றிற்கான தரவுகளையும் இதர உள்ளீடுகளையும் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைக்கும் மற்றும்

பணிக்குழுக்களுக்கும் அளிப்பது நிரல்சார்ந்த அணுகுமுறையாகும்.

**இன்னுயிர் காப்போம்** எனும் திட்டம் இலக்கு 3.6–ஐ அடைவதற்காக, சாலைப் போக்குவரத்து விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மீண்டும் மஞ்சப்பை** எனும் பிரச்சார திட்டம், இலக்கு 12.5–ஐ அடைவதற்காக, 1000 மக்கள் தொகைக்கு (டன்/ஆண்டு) ஒரே முறை பயன்படுத்தி, கழிவுகளாக்கப்படும் நெகிழிப்பை உபயோகத்தினை குறைப்பதற்கான மாற்று வழிமுறையாகும்.

**இல்லம் தேடி கல்வி திட்டம்**, இலக்கு 4.1 ஐ அடைவதற்காக மாணாக்கர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் கொரனோ பெருந்தொற்று காலத்தில் ஊரடங்கால் பள்ளிகள் வாயிலாக நேரடி வகுப்புகள் நடத்தப்படாததால் உண்டான கற்றல் குறைபாடுகளை நேர்செய்வதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம், சிறுவர் சிறுமியரிடையே சிறந்த கற்றல் திறனை வளர்ப்பதற்கு ஏதுவாக முற்றிலும் இலவசமான, சமத்துவமான மற்றும் தரமான ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலை கல்வி அளிப்பதற்கு இத்திட்டம் வழிவகை செய்யும்.

**மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்** இலக்கு 3.8ஐ அடைவதற்கு, தொற்று பரவாத நோய்களின் அதிகரிப்பை குறைப்பதற்காக தரமான மருத்துவ சிகிச்சை வழங்குவது மற்றும் பாதுகாப்பான, பயனளிக்கக் கூடிய, தரமான, மலிவான மற்றும் அத்தியாவசியமான மருந்துகள் மக்களின் இல்லத்தில் நேரிடையாக கிடைக்கப்பெறுவதை உறுதி செய்கிறது.

**2.1.11 திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளை கண்காணிப்பதற்கான வரையறை** (Output Outcome Monitoring Framework (OOMF))

திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறிகாட்டி வரையறையின்படி (Output Outcome Monitoring Framework (OOMF) துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றிற்கான நிதி

ஒதுக்கீடு, அவற்றின் வெளியீடு மற்றும் பயன்கள் / விளைவுகளை குறித்திடும் அட்டவணையுடன். மாநில குறிகாட்டி வரையறையுடன் இணைக்கும் பணி உரிய துறைகளால் ஒரு வரையறைக்கப்பட்ட அணுகுமுறையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வரையறையானது பின்வரும் முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது:–

- திட்டங்களின் வெளியீடு மற்றும் விளைவுகளை தெளிவாக வரையறுத்தல்
- தரவுகள் கிடைக்கப்பெறாத முக்கிய வெளியீடு விளைவு குறிகாட்டிகளை அடையாளம் கண்டறிதல்
- அளவிடக்கூடிய திட்ட விளைவுகளிலிருந்து முக்கிய தணிக்கை மற்றும் மதிப்பீட்டிற்காக வினாக்களை உருவாக்குதல்
- ஒருங்கிணைந்த வாய்ப்புகளை கண்டறிந்து அவற்றை பட்டியலிடுதல்

இந்த வரையறையானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு தொடர்புடைய திட்டங்கள் மற்றும்

இதர திட்டங்களில், சிறந்த செயல்பாடுகள் கொண்டுள்ள திட்டங்கள் மற்றும் சிறந்த செயல்பாடுகள் இல்லா திட்டங்களை அடையாளம் கண்டறிந்து, அதற்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு துறைகளுக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைகிறது.

### 2.1.12 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான கூட்டாண்மை

வளர்ச்சி, மதிப்பீடு மற்றும் சிறந்த செயல்படுத்துதலுக்கான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றிற்கான உள்ளீடுகளை அளிப்பதன் வழியாக, நீடித்த வளர்ச்சி இலக்குகள் அடையப்படுவதற்கான கூட்டாண்மையை சிறப்பாக நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான கொள்கையை கருத்திற்கொண்டு, கூட்டாண்மை செயல்முறைக்கு ஏதுவான தளத்தினை உருவாக்குவதற்கான பொறுப்பினையும் இத்துறை கொண்டுள்ளது.

**வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகத்துடனான கூட்டாண்மை (Development, Monitoring and Evaluation Office - DMEO)**

DMEO அலுவலகம் ஒன்றிய அரசின் நித்தி ஆயோக் அமைப்பின் செயல்முறையான மாநிலங்களிடையேயான ஒத்துழைப்பு மற்றும் கூட்டாட்சி தன்மையை உருவாக்குதலின் கீழ், மாநிலங்களுக்கு தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதலை தனது பொறுப்பாகக் கொண்டுள்ளது. வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகத்தின் நிறுவனம் சார்ந்த அமைப்பு முறை, திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (**Monitoring and Evaluation)** முறையில் தேவையான முன்னேற்றங்களை நாட்டில் உருவாக்குவதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளது. தரவுகளுக்கான உந்துதல், குடிமக்களை மையப்படுத்திய திட்டம் மற்றும் கண்காணிப்பினை உருவாக்குதல் மற்றும் விளைவுகளை எதிர்நோக்கும் திட்ட மேலாண்மை மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றிற்காக இந்த அலுவலகத்தின் உதவிகள்

மற்றும் ஆலோசனைகளை பெற்று பயனடையும் நோக்கில், மாநில அரசு இவ்வலுவலகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் அங்கமான யூனிசெஃப் நிறுவனம், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் பல்வேறு நடவடிக்கைகளில், குறிப்பாக, வறுமை ஒழிப்பு, குழந்தைகள் மற்றும் மகளிர் மேம்பாடு மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 செயல்திட்ட முன்னேற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கான தனது ஒத்துழைப்பினை ஒருங்கிணைந்த மற்றும் கூட்டாண்மை தன்மையின் அடிப்படையில் மாநில அரசுக்கு அளித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் மகளிர் மன்றத்துடன் மாநில அரசு மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம், நீடித்த வளர்ச்சி இலக்கின் 5வது இலக்கான பாலினச் சமத்துவத்தை அடைவதற்கும், பாலின வாரியான வரவு செலவு திட்டமிடுதலை சார்ந்திருத்தல் மற்றும் பாலினம் சார்ந்த வன்முறைகளை தடுப்பது உள்ளிட்ட பணிகளை உலக சுகாதார அமைப்புடன் இணைந்து மேற்கொள்வதற்கு

வழி காணுகிறது. இதேபோல், ஜெர்மன் நாட்டினை சார்ந்த வள நிறுவனத்துடன் (GIZ) மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், நகர்ப்புற வாழ்விட மேம்பாடு மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான நகர்ப்புற குறிகாட்டி வரையறைகளை நிர்ணயித்தல் மற்றும் பருவ நிலை மாற்றம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் பெறப்படுகிறது.

திறன் மேம்பாட்டு முன்முயற்சியின் ஒரு பகுதியாக, எக்செல், ஆர் மொழி (R Language), ஆர்க் (Arc), புவியியல் தகவல் அமைப்பு (GIS), டேபிள்யூ (Tableau) மற்றும் டேட்டாரேப்பர் (Datawrapper) ஆகியவற்றைப் பயன்படுத்தி தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் பற்றிய விரிவான பயிற்சித் திட்டம் பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறை மற்றும் மதிப்பீட்டு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை அலுவலர்களுக்கு GIZ ஆல் ஏற்பாடு செய்யப்பட்டது. கோயம்புத்தூர் நகர அலுவலர்களுக்கு SDG தரவு

போர்டல் மற்றும் கண்காணிப்பு பலகை குறித்த நேரடி பயிற்சி அளிக்கப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பணிகளுக்காக, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக, பல்வேறு வள நிறுவனங்களின் ஆலோசனைகள், உதவிகள் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைக்கு அளிக்கப்பட்டு வருகிறது. சமூகத்தின் மிக நலிவடைந்த பிரிவினர் மற்றும் எளிதில் பாதிப்பிற்குள்ளாகும் பிரிவினர்களின் நிலைமையை வெளிக்கொணரும் வகையில் 'எவரும் விடுபடா வண்ணம்' எனும் நீடித்த வளர்ச்சி இலக்கின் அடிப்படை கருத்தைச் சார்ந்த ஆய்வு மாநிலத் திட்டக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே உயர் செயல்திறன் கொண்ட இந்த மாநிலத்தின் பின்னணியில் மற்ற துறைகளை ஊக்குவிப்பது, தேசிய அல்லது உலக அளவில் மாநிலங்களுக்குச் சமமான இலக்குகளை நிர்ணயிப்பது மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கு குறிகாட்டிகளில் அவற்றின் செயல்திறனை அவ்வப்போது மதிப்பிடுவது,

அவற்றின் வெற்றியைப் பகிர்ந்து கொள்வது மற்றும் சிறந்த நடைமுறைகள், மற்றும் SDG களை தமிழ்நாடு அடைவதை உறுதி செய்வதற்காக ஒருங்கிணைந்த முறையில் கொண்டு வருவதற்கு பணியாற்றுதல் போன்றவை இத்துறையின் செயல்பாடாகும்.

## 2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 02.09.2014–ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.81–இல் ஆணை வெளியிடப்பட்டு ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக (Abdul Latif Jameel – Poverty Action Lab) (J–PAL–SA) அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தில் (Massachusets Institute of Technology, USA) செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த

செயல் ஆராய்ச்சி ஆய்வகம் மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையில் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். தெற்கு ஆசிய மண்டலத்தில் ஜே–பாலின் பணிகளை நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்ட ஜே–பால் தெற்கு ஆசியா வழி நடத்துகிறது,

அரசுத் துறைத் திறனை மேம்படுத்தி, நடப்பு மற்றும் புதிய திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளை திறமையாகச் செய்வதற்கு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, நான்கு முக்கிய நடவடிக்கைகளின் வாயிலாக தமிழக அரசிற்கு உதவி செய்து வருகிறது. (i) நடப்பு

ஆய்வுகளிலிருந்து உள்ளூர் சவால்களுக்கான நுண்ணறிவை செயல்படுத்த கொள்கை ஆய்வு உரையாடல்களை ஈடுபடுத்துவது (ii) சாத்தியமான அளவீட்டிற்கு ஏற்றபடி புத்தாக்கங்களை சோதித்து வடிவமைப்பது (iii) ஆதாரங்களை உருவாக்கவும் நுகரவும் அரசுத் திறனை வலுப்படுத்துவது (iv) முடிவு எடுத்தலில் நிர்வாகத் தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்துவது.

இப்பணி பதினொரு அரசுத் துறைகள் மற்றும் ஜே–பாலை சேர்ந்த இருபது ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட, 50 ஆராய்ச்சியாளர்களை கொண்டது. தலைமைச் செயலாளரின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014–ஆம் ஆண்டிலிருந்து நடந்த ஆறு வழிகாட்டும் குழுக் கூட்டங்களில், 18 ஆய்வுகளும் மற்றும் அளவீட்டிற்கான ஒரு முன்னோடி ஆய்வும் ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் பதினோரு முன்னோடி மற்றும் வாய்ப்பு அறியும் ஆய்வுகளும், தொற்றா நோய்களின் தாக்கத்தை குறைப்பதற்கான தலைப்புகள் முதல், சிறார் நலன்

பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் ICDS மூலமாகக் கல்வி ஆகிய தலைப்புகள் வரையிலான மூன்று முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வுகளும், முன் ஆரம்பப்பள்ளி மழலையருக்கு புத்தாக்க விளையாட்டு அடிப்படியிலான கணித பாடத்திட்டத்தை அளவீடு செய்வதற்கான ஒரு முன்னோடி ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளன. கூட்டாண்மையின் கீழ் தற்போது, முதியோர் நல்வாழ்வுக்கான ஒரு குழு ஆய்வு, சரக்கு (ம) சேவை வரி சேகரிப்பை மேம்படுத்துதல், சிறார் பெற்றோர் கூட்டு ஏற்பாட்டினை மேம்படுத்துவதற்கான தனி திட்டம் மற்றும் முதலமைச்சரின் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் நிர்வாகத் தரவுகளை பயன்படுத்துவதன் மூலம் முடிவு எடுத்தல் ஆகிய மூன்று வாய்ப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப் படுகின்றன. மாநிலத்தின் முக்கிய முன்னுரிமைகளுக்காக பதினோறு துறைகளுடன் இணைந்து ஆதரவுப்பகிர்வு, புதிய தலையீடுகளை

சோதனை செய்தல் மற்றும் இணை வடிவமைத்தல் ஆகிய பணிகளை ஜே –பால் நடத்துகிறது.

மேலும், கூட்டுக் கொள்கை உரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் சேர்த்து ஜே–பால், மூத்த குடி மக்கள் மற்றும் மாநில கொள்கை வரைவு ஆகியவற்றை முறையே சமூக நலம் (ம) மகளிர் மேம்பாடு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்துகிறது. ஜே–பால், தமிழ் நாடு மின் ஆளுமை நிறுவன ஒத்துழைப்புடன் முடிவெடுத்தலுக்கான நிர்வாகத் தரவுகளின் சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்துகிறது. மேலும், உட்கட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் உள்மதிப்பீடுகளிலிருந்து ஆதாரங்களை பயன்படுத்தவும், உருவாக்கம், பகுப்பாய்வு செய்யவும் 15 பட்டறைகள் வாயிலாக பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இப்பயிற்சி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை மற்றும் பொருள்இயல் (ம) புள்ளிஇயல் துறை மற்றும் சமூக நலன் பணியாளர்களுக்கும் மற்றும் இந்திய குடிமையியல்

பயிற்சியாளர்களுக்கும் மற்றும் கூடுதலான ஆலோசனை ஆதரவையும் அளிக்கிறது. கருத்துகளுக்கு மாற்றாக மேம்பட்ட தரவு இயக்க முடிவு எடுத்தல் வழிகளுக்கான கருத்துக்களை பரிமாற்றம் செய்ய ஜே–பால், டி.ஏ.யு (J–PAL – DAU) உடன் இணைந்து தற்போது கொள்கை வலை கூட்டத் தொடர்களுக்கான தரவுகளை நடத்துகிறது.

முடிவுகளும் பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் கண்டுபிடிப்பின் அடிப்படையிலான புத்தாக்கங்களும் மேம்பாடுகளும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பள்ளிக்கல்வி, வணிகவரி, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் (ம)

குடிநீர் வழங்கல் துறைகள் இக்கொள்கை ஆராய்ச்சி ஆயிவில் ஈடுபட்டுள்ளன.

### 2.2.1 முக்கிய சாதனைகள்:

தமிழ்நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக் கூட்டாண்மை, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்க, மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்க பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசாங்கம், தற்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதார மற்றும் குடும்பநலம், சமூக நலம் மற்றும் பள்ளிக்கல்வித் துறைகளில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்ட (எம்.ஆர்.எம்.பி.எஸ்) ஆய்வு, தாய் மற்றும்

குழந்தை ஆரோக்கியத்திற்கான திட்ட செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக அதன் தரவுச் சேகரிப்பு மற்றும் மேலாண்மை முறையை வலுப்படுத்த சுகாதாரத்துறையின் பல மேம்பாடுகளுக்கு வழி வகுத்தது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, ஜே–பால் இணைந்து மேற்கொண்ட மு

**முதியோர் நிலை குறித்த முதற்கட்ட அடிப்படை குழு கணக்கெடுப்பு,** மதிப்பீடுகளை கணக்கீடு செய்வதன் மூலம் முதியோரில் பெரும்பான்மையானோர் தனிமையில் வாழ்வதற்கான சவால்களை எதிர்கொள்ள மற்றும் தலையீடுகளை மதிப்பீடு செய்ய அரசாங்கத்தைத் தூண்டியுள்ளது.

அரசுக் கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவன மயமாக்கவும் நிரல் **மதிப்பீடுகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிடுவதன் மூலம்**, கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள

முடிவெடுப்பதற்கு நிர்வாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீடு (ம) செயல் முறை ஆராய்ச்சித் துறை மற்றும் பொருள்இயல் (ம) புள்ளிஇயல் துறைகள், உருவாக்கப்பட்ட தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்த டிஜிட்டல் தரவு சேகரிப்பு தளங்களையும் (ம) ஒருங்கிணைந்த புதிய உத்தரவாதமான வழிமுறைகளையும் மேற்கொள்கின்றன. தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவுபடுத்துவதற்கு முன்பு, அவற்றின் மீது கள ஆய்வு மேற்கொண்டும், விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும், இந்தியாவின் பிற பகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக

அமைப்பும் (J–PAL–SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

## 2.3 சிறப்பு முயற்சிகள்

அரசு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 02.11.2006 ஆம் நாளிட்ட 146 ஆம் (நிலை) எண் அரசாணையில், "பொது அதிகார பொருண்மைகளின்" கீழ் வரும் அலுவல் விதிகளின் முதலாவது அட்டவணையில் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மையை சேர்ப்பதற்கு ஆணைகள் பிறப்பித்தது. வெவ்வேறு துறைகளிடமிருந்து வரப்பெற்ற புத்தாக்கத் திட்டங்களை செயல்முறை படுத்துவதும் அரசின் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதும் சிறப்பு முயற்சிகள் பிரிவின் பொருண்மையாகும். நோக்கத்தினை சிறப்பு முயற்சியாக செயல்படுத்துவதற்கான விரிவான நடைமுறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஒருங்கிணைக்கப்படலாம். அதன் அடிப்படையில்,

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18.01.2007 ஆம் நாளிட்ட 10 ஆம் (நிலை) எண் அரசாணையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், இத்துறையின் கீழ், 'சிறப்பு முயற்சியாக' செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## 2.4 இருபது அம்சத் திட்டம்–2006

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம்–2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலை வாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம்,

நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்–2006–இன்கீழ் குறித்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் செயல்பாடுகள் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**2.5 முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள்**

தலைமைச் செயலகத்தின் துறைகளான எரிசக்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, தொழில்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் நீர்வளத் துறைகள் மூலம் ரூபாய். 100

கோடிக்கும் அதிகமான செலவில் முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய ஆறு தலைமைச் செயலக துறைகள் மற்றும் அவற்றின் துறைத் தலைமைகளால் முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்த தரவுகள் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகிறது. திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட "இ–முன்னேற்றம்" என்ற இணையதளம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அண்மையில் தொடங்கப்பட்டு, செயல்படுகிறது. இந்த பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யும் குழு தற்போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மறுசீரமைக்கப்பட்டுள்ளது, இக்குழு 2 மாதங்களுக்கு ஒரு முறை முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் குறித்த ஆய்வு நடத்தும். திட்டம் மற்றும் வளர்ச்சி துறையானது பெரிய முக்கிய

உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய உதவும் முகமைத் துறையாக செயல்படுவதுடன் தொடர் கண்காணிப்புகள் மேற்கொள்ளும் அடிப்படையில் இணையதளம் மாற்றியமைக்கப்பட்டு, துல்லியமான மென்பொருளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 3.0 துறைத்தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள்/ நிறுவனங்கள் பின்வருமாறு:

i. மாநில திட்டக் குழு

ii. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

iv. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

v. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL), ஒரு கூட்டுத்துறை நிறுவனம்.

இத்துறைகளின் நடவடிக்கைகள் கீழ்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:

## 3.1 மாநில திட்டக் குழு

மாநிலத்தின் வளர்ச்சி குறித்த செயல்பாடுகளின் மீது ஆலோசனைகளை மாநிலத்தின் சமூதாய சமத்துவத்துடனான முன்னேற்றம் பெற பல்வேறு உக்திகளை அரசுக்கு வழங்கி வரும் ஒரு அமைப்பாக மாநில திட்டக் குழு செயல்பட்டு வருகின்றது.

மாநில திட்டக் குழுவின் அலுவல்சாரா தலைவராக உள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு துணைத் தலைவர், இரண்டு முழுநேர உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஏழு பகுதிநேர உறுப்பினர்கள் உள்ளிட்ட 10 நபர்கள் கொண்ட குழுவாக தற்பொழுது உள்ள மாநில திட்டக் குழுவானது, ஜூன் 2021–ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,

நிதித்துறை ஆகியோர் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் உறுப்பினர்கள் ஆவார்கள். மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர், இதில் நிர்வாக பொறுப்பு வகிப்பார்.

மாநில திட்டக் குழுவானது, மாநில அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்புடன் மாநில அரசின் கொள்கைகள் வகுப்பதில் மற்றும் மாநிலத்தின் வளர்ச்சிக் குறித்த சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் அடித்தளமாக உள்ளது.

### 3.1.1 மாநில திட்டக் குழுவின் முதன்மையான பணிகள்

(i) பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை போன்ற பேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக் கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்.

(ii) தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும் பொழுது அனுப்புதல்

(iii) நீடித்த வளர்ச்சி இலக்குகள் – 2030–இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஓட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகாட்ட நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்.

(iv) ஐக்கிய நாட்டு பொது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2030–இல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் நிதிக்குழுவின் குறிக்கோள்களுக்கு ஏற்ப துறைச்சார்ந்த செயல்பாட்டு திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்.

(v) கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும் அவற்றை செயல்படுத்துவதை துரிதப்படுத்துவதற்கும், " கொள்கை ஒத்திசைவு

சிக்கல்களை" முறையாக நிவர்த்தி செய்து, துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும்.

(vi) பல்வேறு துறைகளில் தொடர்ந்த ஆய்வுகள் மேற்கொண்டு அதன் ஒப்புமைகளை அரசு சார்ந்த தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்.

(vii) தகுந்த உள்ளீடுகள் மற்றும் அளவீடுகளை மாநிலத்திற்கு அளித்து மனிதவள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு மற்றும் இதர குறியீடுகள் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(viii) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டுவரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு

துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய நுட்பமான விவரங்களை அரசுக்கு பரிந்துரைத்தல்.

(ix) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின் மூலம் அறிவு, புதுமை மற்றும் தொழில் முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்.

(x) துறைகளுக்கு இடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்கு முறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்

(xi) இதேபோல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின்

அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(xii) நல்ல உள்ளாட்சி நிர்வாகத்திற்கான பரவலாக்கப்பட்ட திட்டமிடல் கருத்தின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்ட அமைப்புகளை செயல்படுத்துவதன் செயல்திறன் குறித்து ஆலோசனை வழங்குதல்.

(xiii) மேற்படி பணிகளுடன் மாநில திட்டக் குழு கீழ்கண்டுள்ள திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் திட்டங்கள்

### 3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையே காணப்படும் மண்டல வாரியான ஏற்றத்தாழ்வுகள்

களைந்து சமநிலை வாழ்வியல் நிலையை ஏற்படுத்துவதற்காக மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2012–13–ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இத்திட்டமானது, வருமானம், வேலைவாய்ப்பு, வறுமை, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின சமத்துவம் ஆகிய காரணிகளில் பின்தங்கிய வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

ஒரு விரிவான ஆய்வு முறையின் வாயிலாக மாநிலத்தில் 105 பின்தங்கிய வட்டாரங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டம் அவ்வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நகர்ப்புறங்களை உள்ளடக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் குடிசைப்பகுதிகள் அதிகம் உள்ள வார்டுகளில் நான்கில் ஒரு பகுதியினர் பரிசீலிக்கப்படுகின்றனர். பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள பேரூராட்சிகள் மற்றும் அதிகம் மக்கள் தொகை அடர்த்தி கொண்ட பேரூராட்சிகளும் இத்திட்டத்தின் கீழ் வருகின்றன.

மாநில அளவிலான அதிகாரம் பெற்றக் குழு, மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரை தலைவராகக் கொண்டு திட்ட செயலாக்கத்தை வழிநடத்தவும், கண்காணிக்கவும் தொலை நோக்குத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுலவர்களை ஈடுப்படுத்தி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 3.1.2.1 திட்டங்களுக்கான ஒப்புதல்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் அமைக்கப்பட்ட அதிகாரம் பெற்ற குழுவால், கடந்த 2020–2021 ஆம் ஆண்டு வரை ரூ.596.64 கோடி மதிப்பிலான 747 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பின்வரும் காரணிகளின் மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் சரிசெய்யப்படுகின்றன.

- வருமானம் தொடர்புடைய திட்டங்கள் – ரூ.102.65 கோடி மதிப்பீட்டில் 147 திட்டங்கள்
- வறுமை குறைக்க தொடர்புடைய திட்டங்கள் – ரூ.74.30 கோடி மதிப்பீட்டில் 107 திட்டங்கள்
- கூடுதல் வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்புடைய திட்டங்கள் – ரூ.57.93 கோடி மதிப்பீட்டில் 118 திட்டங்கள்
- பள்ளிகள் மற்றும் கல்வி உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் தொடர்புடைய திட்டங்கள் – ரூ.82.81 கோடி மதிப்பீட்டில் 91 திட்டங்கள்
- சுகாதாரம் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் தொடர்புடைய திட்டங்கள் – ரூ.227.97 கோடி மதிப்பீட்டில் 218 திட்டங்கள்
- பாலின இடைவெளியை குறைத்தலை நோக்கமாக கொண்ட திட்டங்கள் – ரூ.50.98 கோடி மதிப்பீட்டில் 66 திட்டங்கள்

2012–13 ஆம் ஆண்டுகளில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் 105 பின் தங்கிய வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டன. 10 ஆண்டுகள் கடந்து விட்டதால் நடப்பாண்டு காலத்தில் மீண்டும் பின்தங்கிய வட்டாரங்களை மறு அடையாளம் காணும் பொருட்டு ஒரு திட்டம் வகுக்கப்பட உள்ளது. அதன்படி மாநில திட்டக் குழு, புவியியல் அமைப்பில் மாவட்டங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பின்தங்கிய நிலையினை கண்டறிய சிறப்பு காரணிகளையும் அதற்கான வழிமுறைகளையும் வகுக்க உள்ளது. விரிவான ஆலோசனைக்கு பின் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் பின் தங்கிய வட்டாரங்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்கான சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை கண்டறிந்து உதாரணம் கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றில் போதிய வளங்களை

இத்திட்டத்தின் வாயிலாக முழுமையாக உட்புகுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.1.3 தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், தமிழ் நாட்டை இந்தியாவிலேயே புத்தாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குவதற்கும் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாட்டில் செப்டம்பர் 2014–ல் ஏற்படுத்தப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தினை செயல்படுத்த, புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி தொடக்க நிதியாக ரூ.150 கோடி அல்லது அரசு நிர்ணயத்தின் படி தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது. கோவிட் – 19 பெருந்தொற்று காரணத்தினால் ஏற்படுத்தப்பட்ட நிதி கட்டுப்பாடுகள் காரணமாக 2020–21 மற்றும் 2021–22

இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் நிதி தவிர்க்கப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டு முதல் 2020–21 வரை 330 திட்டங்கள் சுமார் ரூ.696.90 கோடி மதிப்பில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டங்களின் கீழ் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கென நடப்பாண்டில், 2022–23 ஆம் நிதியாண்டிற்கு ரூ.150 கோடி வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2022–23 நிதியாண்டடிற்கு ரூ.87.83 கோடி அளவில் 22 திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நடப்பாண்டிலிருந்து, மாநிலத் திட்டக் குழுவில் இத்திட்டத்தின் கீழ் ஆண்டு முழுவதும் துறைகளிடம் இருந்து நேர்த்தியான முன்வரைவுகள் பெறப்பட்டு ஒப்புதல் வழங்கி புதுமைகளை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து தலைமைச் செயலக துறைகளால் மட்டும் வழங்கப்பட்டு வந்த திட்ட ஒப்புதல் தற்பொழுது மாநிலத் திட்டக் குழுவின் வாயிலாகவே புத்தாக்க திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கும் வகையில் வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைகளும் மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டங்களை செயல்படுத்தும் பணிச்சுமை காரணமாகவும் புதுமை திட்டங்களின் நிதி ஒதுக்கீடு குறைந்த அளவில் இருப்பதால் ஏற்படும் சுணக்க நிலையை களைந்து செயல்பாடுகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் அதன் செயல்படுத்தும் திட்ட வடிவமைப்பில் சீரிய மாற்றங்களை ஏற்படுத்தும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு புத்தாக்க முயற்சி திட்டங்களின் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்க நேரடியாக மாநில திட்டக்குழு அரசுக்கு கருத்தியலை முன்வைத்துள்ளது.

### 3.1.4 தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் என்ற ஒரு நிலையான வாரியம், துணைத் தலைவர் தலைமையின் கீழ் நிலவளத்தினை மதிப்பீடு செய்து, நிலம் மற்றும் நீர் வளங்கள் தொடர்பான துறைகளில் கொள்கை குறுக்கீடுகளில் ஆராய்ச்சியின் வாயிலாக பரிந்துரை செய்யப்பட்ட குறைகளின் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசுக்கு ஆலோசனைகளை வழங்க மாநில திட்டக்குழுவில் 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டு முதல் 2021–22 ஆம் ஆண்டு வரை மொத்தம் 72 ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு ரூ.778 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாராய்வுகள் நிலப் பயன்பாடு, நீர், விவசாயம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல். ஈரநிலம், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல், வனம், கழிவு மேலாண்மை மற்றும் ஆரோக்கியம் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதே போன்று 11 பயிலரங்கங்கள் மற்றும் ஓர் கருத்தரங்கமும் மேற்படி காலத்தில் ரூ.55.97 இலட்சம் செலவீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.80 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 7 ஆராய்வுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு ஆண்டு முதல் மேற்படி ஆராய்வுகள் குறிப்பிடும் முக்கிய நேர்வுகளை கள ஆய்வு செய்த பின்னர் அதற்கான ஆவணங்களுடன், இறுதி தவணை விடுவிக்க கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆராய்வுகளின் தொகுப்பு மற்றும் பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்வதற்கும், ஆராய்வுகளின் சுருக்கங்களை அச்சிட்டு அவற்றினை மாநில திட்டக் குழுவின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

### 3.1.5 **முன்னேற விழையும் மாவட்டங்களின் நிலையை மாற்றும் திட்டம்**

கூட்டுறவு கூட்டாட்சி, ஒருங்கிணைப்பு (மத்திய மற்றும் மாநில திட்டங்களின் ஒருங்கிணைப்பு), ஒத்துழைப்பு (மத்திய,மாநில அளவிலான அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள்) மற்றும் அனைத்து குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் வலுவான அர்ப்பணிப்புடன் ஒரு வெகுஜன இயக்கத்தால் உந்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான போட்டி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில், முன்னேற விழையும் மாவட்டங்களின் நிலையை மாற்றும் திட்டம் 2017 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் ஒருங்கிணைந்த குறியீட்டின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட 115 முன்னேற விழையும் மாவட்டங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. வறுமை, சுகாதாரம் மற்றும்

ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்டங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தேர்வு அளவுகோல்களை கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.1.5.1 முக்கிய அம்சங்கள்

சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர் வளங்கள், நிதி உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

### 3.1.5.2 போட்டியிடுதல்

மாவட்டங்கள் முதலில் தங்கள் மாநிலத்திற்குள் உள்ள சிறந்த மாவட்டத்திற்கு இணையாக முன்னேறுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. பின்னர் போட்டி கூட்டாட்சி என்ற உணர்வில் மற்றவர்களுடன் போட்டியிடுவதன் மூலமும், மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதன் மூலமும் நாட்டின் சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக மாற விரும்புகின்றன.

மாதாந்திர அடிப்படையில் 49 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளில் மாவட்டங்களின் முன்னேற்றத்தை பதிவு செய்வதற்காக ஒரு (online) கண்காணிப்பு இணையதளம் நித்தி ஆயோக்கினால் (NITI AAYOG) நிறுவப்பட்டுள்ளது. மாவட்டங்கள் தங்கள் இலக்குகளுக்கு எதிராக அடைந்துள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில், மாவட்டங்களின் ஒட்டுமொத்த முன்னேற்றம் மற்றும் துறைசார் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இத்தரவரிசைப் படுத்துதல் மாவட்டங்களுக்குகிடையே போட்டியை உருவாக்குகின்றது. தேசிய அளவில் தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள மாவட்டத்திற்கு ரூ.10 கோடியும், இரண்டாம் இடத்தில் உள்ள மாவட்டத்திற்கு ரூ.5 கோடியும் நிதி அளித்து அந்த மாவட்டத்திற்கு தேவையான திட்டங்களை செயல்படுத்த அனுமதி அளிக்கிறது.

### 3.1.5.3 நிதி ஆதரவு

மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் (ம.பொ.நி) அவற்றின் இணைக்கப்பட்ட (கார்ப்பரேட்) சமூகப் பொறுப்பு (இ.ச.பொ) நிதி மூலம் மாவட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

மேலும், முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்ட மாவட்டங்களுக்கு வெளிநாட்டு உதவி பெறும் திட்டம் (EAP), ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) மூலம் நித்தி ஆயோக் (NITI AAYOG) நிதி வழங்குகிறது.

### 3.1.5.4 மாவட்டங்களின் செயல்திறன்

தொடக்கத்திலிருந்தே படிப்படியாக முன்னேறி வரும் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள், கடந்த 2018 ஏப்ரலில் முறையே 45.6 மற்றும் 46.8 என்ற அடிப்படை மதிப்பிலிருந்து, 2022 ஜனவரியில் முறையே 64.6 மற்றும் 63.1 என்ற கூட்டு குறியீட்டு புள்ளிகளை எட்டியுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் வேளாண்மை மற்றும் நீர்வள ஆதாரத் துறையில் முறையே ஏப்ரல்–மே 2019 மற்றும் பிப்ரவரி – மார்ச் 2021 இல் அதன் செயல்திறனுக்காக முதல் இடத்தைப் பெற்றது. இதற்காக திட்டம் சாரா நிதியாக தலா ரூ.3.00 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் மார்ச் 2019–இல் அடிப்படை உட்கட்டமைப்பில் முதலிடம் பெற்றமைக்காக ரூ.3.00 கோடியும், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துப்பிரிவில் பெற்ற தரவரிசையின் அடிப்படையில் ஜீலை–2020–இல் ரூ.3.00 கோடியும், ஒட்டுமொத்த செயல்திறன் அடிப்படையில் அக்டோபர்–2021–இல் ரூ.1.00 கோடியும் மற்றும் ஒட்டுமொத்த செயல்திறன் அடிப்படையில் இரண்டாம் தரவரிசை பெற்றமைக்காக டிசம்பர்–2021–இல் ரூ.4.00 கோடியும் பரிசுத் தொகையாக பெற்றுள்ளது.

### 3.1.6 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலின்படி, மாநிலத் திட்டக்குழுவும், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையும் இணைந்து, தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

#### 3.1.6.1 உயர்மட்டக் குழு மற்றும் பணிக்குழுக்கள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக ஒன்பது முகமை துறைகளின் அரசுச் செயலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, மாநில அளவிலான உயர் மட்டக் குழு, அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அவர்கள் இதன் உறுப்பினர் செயலர் ஆவார்.

குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடையும் பொருட்டு தொடர் ஆய்வு செய்து கண்காணிப்பதற்காக, 17 இலக்குகளையும் உள்ளடக்கி, எட்டு (8) பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, தொடர்புடைய துறைகளின் செயலர்கள் இப்பணிக்குழுக்களின் தலைவர்களாக உள்ளனர். இப்பணிக்குழுக்கள் விதிமுறைகளின் படி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை இணைத்தல், கண்காணிக்கக்கூடிய குறிகாட்டிகளின் மேம்பாடு, தொலைநோக்கு 2030–க்கான ஆவணத்தை தயாரித்தல், 17 இலக்குகளை அடைவதை அவ்வப்போது கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றன. தொடர்புடைய துறைகள் இப்பணிக்குழுக்களின் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பணிக்குழுக்களில், மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர்கள் உறுப்பினர் அமைப்பாளர்களாக உள்ளனர். இந்த பணிக்குழுக்கள் ஒவ்வொன்றும் பல்வேறு பிரிவுகள்

மற்றும் துறைகளையும் உள்ளடக்கிய முடிவுகள் மேற்கொள்வதற்கும், ஒன்றிணைவதற்கும் விவரங்களை அளிக்கக் கூடியதாகவும், உள்ளன. இப்பணிக்குழுவில் உள்ள மாநில அரசின் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பணிக்குழுக்களுக்கு வரையறை செய்யப்பட்டுள்ள பணி வரையறைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளல் வேண்டும். நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பாக பணிக்குழுக்களால் தயாரிக்கப்படும் பல்வேறு அறிக்கைகளையும் ஆவணங்களையும் ஒருங்கிணைத்து தயாரிக்கும் பணியினை மாநிலத் திட்டக்குழு மேற்கொள்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான, 2016 முதல் 2020 வரையிலான நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிலை அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

### 3.1.6.2 தமிழ்நாட்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தொலைநோக்கு ஆவணம்

இத்தொலைநோக்கு ஆவணத்தின் குறிக்கோள், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளில் மாநிலத்தின் நிலைமையை எடுத்துக் காட்டுவதோடு, தமிழகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான பொருத்தமான உத்திகளையும் செயல் திட்டங்களையும் வடிவமைத்து வழங்குவதாகும். துறைகளின் உள்ளீடுகளுடன் அனைத்து இலக்குகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொலைநோக்கு ஆவணம் மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 3.1.6.3 நீடித்த வளர்ச்சி இலக்குகள் உள்ளூர்மயமாக்கல் – மாநில / மாவட்ட / வட்டார குறிகாட்டி வரையறை

ஒவ்வொரு இலக்கு மற்றும் குறிக்கோளுக்கும் கண்காணிக்கக்கூடிய குறிகாட்டிகளை வரையறை செய்தல் பணிக்குழுக்களுக்கான மற்றொரு முக்கியமான பொறுப்பாகும். தேசிய குறிக்காட்டி வரையறையை அடிப்படையாகக் கொண்டு,

தொடர்புடைய துறைகளுடனான கலந்தாய்வுக் கூட்டங்களின் வாயிலாக மாநிலத்திற்கான குறிகாட்டி வரையறை இறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையில் வெளியிடப்பட்டுள்ள மாவட்ட அளவில் தரவுகளை கொண்டுள்ள 104 குறிகாட்டிகளையும் வட்டார அளவில் தரவுகளை கொண்டுள்ள 93 குறிகாட்டிகளையும் கண்டறிய உள்ளீடுகளை வழங்கியுள்ளது.

**3.1.6.4 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதளம் மற்றும் கண்காணிப்புப் பலகை**

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஒவ்வொரு குறிகாட்டிற்குமான தரவுகளை பதிவேற்றுவதற்காகவும் அதனைக் கொண்டு குறிக்கோள்களின் முன்னேற்றத்தை இணையதளம் வாயிலாக கண்காணிப்பதற்காகவும் கண்காணிப்புப் பலகையுடன் கூடிய பிரத்யேக இணையதளம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. தொடர்புடைய ஒவ்வொரு

துறைக்கும் அத்துறைகளுக்கான குறிகாட்டிகளின் தரவுகளை அத்துறை அலுவலர்களே பதிவேற்றம் செய்வதற்காக இணைய தள பயனாளர் நுழைவு குறியீடு உருவாக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட மற்றும் வட்டார குறிகாட்டிகளுக்கான தரவுகளும் இவற்றில் பதிவேற்றம் செய்வதற்கான வசதிகள் உள்ளது.

### 3.1.6.5 துறைகளில் நீடித்த வளர்ச்சி இலக்கு அலகு

ஒவ்வொரு நிருவாகத் துறையிலும் அத்துறை தொடர்பான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்துவதற்கான அமைப்புகள் மற்றும் வழிமுறைகளை செயல்படுத்தும் பொருட்டு நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான ஒரு அலகு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகள், துறைகளுக்கு உதவியாகவும் நீடித்த வளர்ச்சி இலக்கு பணிகளில் துறைகளின் செயல்பாட்டினை வலிமைப் படுத்துவதாகவும் உள்ளது.

### 3.1.6.6 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழு, மாவட்ட அளவிலான செயற்குழு மற்றும் மாவட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவுகள் அமைத்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாவட்டங்களின் செயல்பாடே மாநிலத்தின் ஒட்டுமொத்த செயல்பாடாக பிரதிபலிக்கிறது மற்றும் இது மாவட்ட, வட்டார, கிராம அளவிலும் மற்றும் பெருநகரம்/நகராட்சி/பேரூராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குவதையும் உள்ளடக்கியதாகும். இந்நோக்கங்களுடன் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழு, மாவட்ட அளவிலான செயற்குழு மற்றும் மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்குகள் பிரிவு ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவு, நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதளத்தில் குறிகாட்டிகளுக்கான மாவட்ட தரவுகள் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும், மாவட்டத்தில் நீடித்த வளர்ச்சி

இலக்குகளை எட்டுவதன் பொருட்டு, மாவட்ட செயற்குழுவிற்கு வழிகாட்டும் பொறுப்பினையும் கொண்டுள்ளது.

### 3.1.6.7 நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு – மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தரவரிசை

நித்தி ஆயோக் அமைப்பானது, 2018ஆம் ஆண்டிலிருந்து, நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு எனும் அறிக்கையினை வெளியிட்டு வருகிறது. இதன் மூன்றாம் பதிப்பான நீடித்த வளர்ச்சி இலக்கு இந்தியக் குறியீடு 3.0 (2020–21), சூன், 2021ல் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கண்டறியப்பட்ட குறிகாட்டிகளின் செயல்பாட்டின் அடிப்படையில் அவற்றினை தரவரிசைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையே இரண்டாம் நிலையில் உள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 4.0–ற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள குறிகாட்டிகளின்

தொடர்பாக விவாதிப்பதற்காக, மாநில அளவிலான இரண்டு நாள் பயிலரங்கம் சென்னையில் 2022 ஜனவரி, 4 மற்றும் 5ஆம் தேதிகளில் மாநிலத் திட்டக்குழுவால் நடத்தப்பட்டது. இப்பணிப் பட்டறையில் நித்தி ஆயோக் அமைப்பின் ஆலோசகர் (நீடித்த வளர்ச்சி இலக்கு) அவர்களின் தலைமையிலான குழுவினர் குறியீட்டிற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள், தரவு கணக்கிடப்படவுள்ள ஆண்டு, தரவுகளின் மூலம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விளக்கப்படக் காட்சி மூலமாக கலந்துரையாடல் மேற்கொண்டனர். மேலும், தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு 5 (2019-20)ன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படவுள்ள பற்பரிமாண வறுமை குறியீடு மற்றும் அதன் அம்சங்கள், தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

**3.1.6.8 திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளை மதிப்பிடுவதற்கான குறிகாட்டி வரையறை (Output Outcome Indicator Framework (OOMF))**

திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறிகாட்டி வரையறை (Output Outcome Indicator Framework (OOMF)) ஆனது, நிதிகளின் பயன்பாட்டை பற்றிய சிறந்த புரிதலை வழங்குவதோடு நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பிற்காகவும் பயனளிக்கக்கூடிய, இந்த வரையறையானது, செலவிடப்படும் நிதியின் பயன்பாட்டுத் தன்மையைப்பற்றி புரிதலை ஏற்படுத்துவதுடன் நிதி மேலாண்மைக்கான சிறந்த கருவியாகவும் செயல்படுகிறது. நடப்பு ஆண்டில் மாநில அளவிலான கண்காணிப்பு கட்டமைப்பை உருவாக்க திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறிகாட்டி வரையறை (Output Outcome Indicator Framework (OOMF) நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான குறிக்காட்டிகளுடன் சேர்க்கப்படவுள்ளது.

### 3.1.6.9 திறன் வளர்ப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான முகமை அலுவலர்களுக்கும் பிற அலுவலர்களுக்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்தான பயிற்சி திட்டம் மாநிலத் திட்டக்குழுவால் தமிழக அரசின் மேலாண்மை பயிற்சி நிறுவனங்களுடனும் இதர மேலாண்மை வள நிறுவனங்களுடனும் இணைந்து நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய திறன் வளர்ப்பு பயிற்சிகள் 2022-23ஆம் ஆண்டிலும் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.1.6.10 மாநில அளவிலான உயர்மட்டக் குழு மற்றும் பணிக்குழுக்களை மறு நிர்ணயம் செய்து நீடித்த வளர்ச்சி இலக்குகள் கட்டமைப்பை மறு சீரமைத்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் முழுமையாக எய்துவதற்காக, மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, மாநில அளவிலான உயர்மட்டக் குழுவில் மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்களையும்

மற்றும் பணிக்குழுக்களில் முழு நேர உறுப்பினர்கள் மற்றும் இதர உறுப்பினர்கள் அவர்கள் துறை சார்ந்தும் உள்ளடக்கி, இக்குழுக்கள் சீரமைத்தல் செய்யப்படவுள்ளது.

## 3.2 பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மாநிலத்தின் அனைத்து புள்ளி விவர செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்கின்றது. இத்துறையின் முக்கிய பணிகள் வேளாண் புள்ளி விவரங்கள், தொழிற்புள்ளி விவரங்கள், வீட்டு வசதி மற்றும் கட்டிடப் புள்ளி விவரங்கள், அங்காடி புலனாய்வு, மொத்தம் மற்றும் நுகர்வோர் விலை குறியீட்டெண்கள், மாநில வருவாய் மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் உட்பட பல்வேறு திட்டங்களுக்கான தரவுகளை சேகரித்து, தொகுத்து மற்றும் பகுப்பாய்வு செய்து அறிக்கை வெளியிடுவதாகும். இத்துறை தமிழக அரசு மற்றும் ஒன்றிய அரசு உரிய கொள்கை முடிவுகள் எடுப்பதற்கும் மற்றும் அரசு நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக, பல்வேறு சமூக பொருளாதார காரணிகள் குறித்த நம்பகமான தன்மையுடனும் போதிய தகவல்களை உரிய நேரத்தில் வழங்குகிறது.

### 3.2.1 துறையின் செயல்பாடுகள்

பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண் போன்ற மதிப்பீடுகள் தயாரிப்பதுடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு தேவையான சிறப்பு கணக்கெடுப்புகள் மற்றும் சமூகபொருளாதார ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொள்வது இத்துறையின் முக்கிய செயல்பாடாகும். ஆண்டுதோறும், தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, மற்றும் தமிழ்நாடு பருவம் மற்றும் பயிர் அறிக்கை துறையினால் வெளியிடப்படுகின்றது. இவை, மாநில அரசின் பல்வேறு துறைகளாலும், ஆராய்ச்சி நிறுவனங்களாலும் மற்றும் பொது மக்களாலும் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது. இத்துறையிலுள்ள திறமையான தொழில் நுட்ப அலுவலர்கள், மாற்று பணியில் தொடர்புடைய துறைகளில் பணிபுரிந்து அத்துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் மற்றும் சமூக பொருளாதார திட்டங்களை

கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்வதில் பயனுள்ள பங்கை ஆற்றி வருகின்றனர்.

தற்போது அனைத்து அரசு துறைகளும், சிறந்த ஆளுமை மற்றும் பொது மக்களுக்கு சேவையை வழங்குவதற்கு, ஆதார அடிப்படையிலான கொள்கைகளை செயல்படுத்த துவங்கியுள்ளன. அதன்படி, இவ்வரசு மாநிலத்தின் நிர்வாக செயல்முறையில் ஆதார ரீதியான கொள்கை முடிவெடுக்க முன்மொழிகிறது. இவ்விலக்கை அடைய அரசு இத்துறையில் திட்டங்களை செயல்படுத்துகின்றது.

### 3.2.2 துறையின் முயற்சிகள்

#### 3.2.2.1 புள்ளி விவர பகுப்பாய்வு பிரிவு (DAU)

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையுடன் இணைந்து புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையம், புள்ளி விவரங்கள் அடிப்படையிலான உள்ளீடுகள், உயர்மட்டக்

கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் புள்ளி விவர பகுப்பாய்வுப் பிரிவு உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவைகளை சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின் போது உருவாகும் அளவற்ற புள்ளி விவரங்களை ஆராய்ந்து அவற்றின் மூலம் செயல்படுத்தக்கூடிய பயனுள்ள அறிக்கைகளை அளிக்கிறது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ் நாடு ஆகும்.

நவீன தகவல் தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாட்டு மென்பொருளைப் பயன்படுத்தி தொடர்புடைய புள்ளி விவரங்களை அனுமான அடிப்படையிலான பகுப்பாய்வு செய்து, விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையம் தற்போது நான்கு திட்டங்களை ஜே–பால் தெற்கு ஆசியாவுடன் இணைந்து செயல்படுத்தியுள்ளது.

(i) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கூற்றுகளின் தரவரிசைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து ஐந்தாவது மாநில நிதி ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(iii) காணாமல் போன நபர்களின் புள்ளி விவரங்களை வைத்து அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிட்டு, மாநில குற்ற ஆவணக் காப்பகத்துடன் இணைந்து அவர்கள் அடையாளங்களைப் பகுப்பாய்வு செய்தது.

(iv) சென்னை பெருநகர காவல்துறையில் பெறப்பட்ட அவசர கால எண் 100–இல் பெறப்பட்ட

அழைப்புகள் தொடர்பான விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

2020 – 2021 ஆம் ஆண்டு, சம்பந்தப்பட்ட துறைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் இரண்டு திட்டங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அமைவிடப் பரப்பு சார்ந்த புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரிக்கவும் மற்றும் குற்றப் பகுப்பாய்வு செய்வதற்கும் ரூ.30.58 இலட்சத்தில் காவல்துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) இயந்திரங்கள் வழி கற்பித்தல் வாயிலாக சரக்கு மற்றும் சேவை வரி சேகரிப்பை மேம்படுத்த ரூ.4.50 இலட்சம் செலவில் வணிகவரித் துறை மற்றும் ஜே–பால் நிறுவனம் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

### 3.2.2.2 தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது இவ்வாய்வின் நோக்கமாகும். தனிநபர், குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியைக் கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக் குறித்த விவரங்கள் கொள்கை வகுத்தலுக்கும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வடிவமைப்பதற்கும் பேருதவியாக இருக்கும்.

இந்த ஆய்வானது மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டம்:– முன் அடிப்படை ஆய்வு / வீடுகளைப் பட்டியலிடுதல் 2 ஆம் கட்டம்:– அடிப்படை ஆய்வு மற்றும் 3 ஆம் கட்டம்:– இறுதி நிலை ஆய்வு. இந்த ஆய்வு சென்னை

மேம்பாட்டு ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இவ்வாய்வின் முக்கிய அம்சமானது கையடக்கக் கணினி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணலில் இலக்க முறையில் களப்பணியிலிருந்து விவரங்களைச் சேகரிப்பதாகும். அதாவது கையடக்கக் கணினி மூலம் டிஜிட்டல் முறை.

முன் அடிப்படை ஆய்வு / வீடுகளைப் பட்டியலிடும் ஆய்வு பணி 2018–இல் நிறைவடைந்து மொத்தம் 2,51,594 குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பதிலளிக்காத வீடுகளில் மீண்டும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட அளவிலான மதிப்பீடுகள் முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் புதியதாக இரண்டு / மூன்றாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் மொத்தம் 42,452 குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு 2 ஆம் கட்ட ஆய்வுப் பணி ஜனவரி 2022 இல் நிறைவடைந்தது.

இக்கணக்கெடுப்பின் அலை–1, ஜூன் 2022 மற்றும் ஆகஸ்ட் 2022 இடையே தொடங்கப்படவுள்ளது. தமிழ்நாட்டு குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வுத் திட்டத்திற்கு, தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து அரசாணை (பலவகை) எண்.19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு) துறை, நாள் 26.02.2016 இல், மொத்த திட்ட தொகை ரூ. 390.00 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.2.3 தமிழ்நாடு கோவிட் கள நிலவர ஆய்வு (TNCPS)

இக்கணக்கெடுப்பு ஒரு வருடத்தில் 3 முதல் 4 மாதங்களுக்கு ஒருமுறை மாதிரி வீடுகளில் நடத்தப்படுகிறது. காலப்போக்கில் கோவிட் ஊரடங்கு நடவடிக்கைகளின் காரணமாக சென்னை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரத் துறை மாநில அளவிலான விரைவான மறுமொழி தொலைபேசி

கணக்கெடுப்பை TNHPS இன் கீழ் 2020–2021 இல் நடத்தியது.

உலகளாவிய தொற்றுநோயின் மோசமான தாக்கத்தை மாற்றியமைக்க தகுந்த கொள்கை நடவடிக்கைகளை வடிவமைக்க தமிழக அரசுக்கு உடனடி நம்பகமான பயனுள்ள தரவை வழங்குவதே கோவிட் கள நிலவர ஆய்வின் முதன்மை நோக்கமாகும். வேலை நிலை (வேலை இழப்பு) மற்றும் வீட்டு வருமானம் போன்ற முக்கிய குறியீடுகள் குறித்த தரவுகளைச் சேகரிக்க ஒரு அளவு முறை பயன்படுத்தப்பட்டது. இத் தொற்று நோய்களின் போது நேர்காணல் அட்டவணையை நிர்வகிக்க கணினி உதவி தொலைபேசி நேர்காணல் (CATI) முறை பயன்படுத்தப்பட்டது.

### 3.2.2.4 தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக, பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNEPS)

வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை, உடல்ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக

மற்றவர்களைச் சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கிய சுகாதார நிலையை அறிதல், மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை அறிந்து கொள்வது இந்த குழுப்பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்பட்டு வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தத் தேவைப்படும் இலக்குகளை அடைய ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும்.

இந்தக் குழு ஆய்வு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் தெற்கு ஆசியா, (J–PAL–SA) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து எட்டு ஆண்டுகள் தொடர் ஆய்வாக இரண்டு வருட கால இடைவெளியுடன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. இந்நிறுவனமானது, தொழில்நுட்ப ஆலோசகராகவும், தரக்கட்டுப்பாட்டாளராகவும்

செயல்பட்டுவருகின்றது. இந்தக் கணக்கெடுப்பு, டேப்லெட்டுகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில் தரவு சேகரிக்கப்படுகிறது.

இந்தக் கணக்கெடுப்பின் கீழ் சுகாதார அளவீடுகள் மற்றும் உயிர் குறிப்பான்கள் முதன்முறையாக தமிழ்நாட்டில் சேகரிக்கப்படுகின்றன. இக்கணக்கெடுப்பில், நோய்சுமை, மனநலம் மற்றும் செயல்பாட்டு ஆரோக்கியம், சுகாதாரப் பாதுகாப்பு, முதியோரின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வு குறித்த நம்பகமான அறிவியல் தகவல்களும் இதில் அடங்கும்.

மனித மேம்பாட்டுக் குறியீடு மற்றும் சார்பு விகிதத்தின் அடிப்படையில் கணக்கெடுப்புக்கு சென்னை (பெருநகர சென்னை பகுதி), திருவண்ணாமலை, தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. வீட்டுப் பட்டியல் ஜீலை 2018

மத்தியில் நிறைவடைந்தது, இந்த ஐந்து மாவட்டங்களில் சுமார் 92,000 குடும்பங்கள்ஆய்வு மூலம் கண்டறியப்பட்டன.

வயதானவர்களுக்கு பொருத்தமான ஆதாரம் அடிப்படையில் கொள்கைகளை வடிவமைப்பதற்கும், முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது. சமூக பாதுகாப்புக் கொள்கை மற்றும் நிரல் தலையீடுகளை வடிவமைப்பதற்கும், ஆராய்ச்சிக்கான தளத்தை உருவாக்குவதற்கும் இது உதவுகிறது,

[ பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அலுவலர்களால் 4,739 வீட்டு பட்டியலில், 6,294 முதியோர்களிடம் இவ்வாய்வு தொடர்பான அடிப்படை கணக்கெடுப்பு 2019 ஜூன் மாதம் நிறைவடைந்து, இதில் 4,496 வயதான மக்களிடமிருந்து சுகாதார அளவீடுகளைப் பொது சுகாதாரத் துறை சேகரித்துள்ளது. அடிப்படைக் கணக்கெடுப்பின்

முடிவுகள் சார்பு நிறுவனத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இந்தக் குழு கணக்கெடுப்பின் அலை–1 மேற்கூறிய ஐந்து மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் மொத்த திட்ட தொகையாக ரூ. 606.00 இலட்சம், அரசாணை (நிலை) எண்.21, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 27.02.2016–இன் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.2.2.5 தமிழக மாநிலத் தேர்தல் –2021 பிரதான பொதுமக்கள் / வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த ஆய்வு (KAP)**

வாக்காளர் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த அடிப்படை கணக்கெடுப்பு (KAP) இந்திய தேர்தல் ஆணையத்தால் முன்மொழியப்பட்டதுபோல் முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு திட்டம் (SVEEP) குறித்த ஆய்வு, தமிழ்நாடு சட்ட மன்ற மாநிலத்

தேர்தல்–2021க்கு முன்னர் பொருள்இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் நடத்தப்பட்டு, 18.02.2021 அன்று தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வடிப்படைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட முறையான வாக்காளர்கள் கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு திட்டத்தின் (SVEEP) வாயிலாகப் பெறப்பட்ட கருத்தின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டமன்ற மாநிலத் தேர்தல் 2021–க்குப் பிறகு, தமிழ்நாட்டில் பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறை (DOES) மூலம் முடிவுநிலை ஆய்வு (KAP) நடத்தப்பட்டது. இவ்வறிக்கை தலைமை தேர்தல் அதிகாரியிடம் 07.04.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

### 3.2.3 துறையின் புதிய முயற்சிகள்

#### 3.2.3.1 வெளிப்படையான புள்ளி விவரங்கள்

தமிழக அரசின் வெளிப்படையான அரசு புள்ளி விவரங்கள் (TNOGD) திட்டத்தின் வடிவமைப்பாக (Nodal

Organization) இந்திய அரசின் தேசிய புள்ளி விவர பகிர்வு மற்றும் அணுகும் கொள்கையுடன் (NDSAP) இணைந்து பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை செயல்படுகிறது. இந்த திட்டத்தில் TNOGD அமைப்பின்கீழ் https://tn.data.gov.in இணையதளம் ELCOT நிறுவனத்தினரால் வழங்கப்படுகிறது. TNOGD அரசாங்க புள்ளி விவரங்களை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல் மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. பொதுமக்களுக்கு இணையவழி மூலம் இணைய முகப்பில் பதிவேற்றம் செய்வதால் துறைகள் மற்றும் பயனர்கள் தரவுகளை ஒரே இடத்தில் பதிவிறக்கம் மற்றும் பார்க்க பயன்படுத்தப்படுகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் வெளியிடப்பட்ட புள்ளிஇயல் கையேடு 2009 முதல் 2019 வரை 11 ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்கள் TNOGD இணையதளத்தில் பகிரக்கூடிய வடிவத்தில் அளிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள்

தேவைப்படும் பகுப்பாய்வு நோக்கங்களுக்காக பதிவிறக்கம் செய்யப்படும் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாவட்டப் புள்ளிஇயல் கையேடுகளும் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. புள்ளிஇயல் கையேட்டில் 42 அத்தியாயங்கள் உள்ளடக்கிய 200–க்கும் மேற்பட்ட நிறுவனம் / துறைகளிலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளது.

### 3.2.3.2 வலைத்தளம்

இத்துறைக்கான வலைத்தளம் ELCOT நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்டு 2021–22 ஆம் ஆண்டு முதல் https://des.tn.gov.in வலைத்தள முகவரியில் செயல்பட்டு வருகிறது.

### 3.2.3.3 பொதுகள ஆய்வு பயன்பாட்டு கட்டமைப்பு

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில், கள மட்டத்திலிருந்து தலைமையகத்திற்கு மினனனு முறையில் தரவுகளை பொதுகள ஆய்வு பயன்பாட்டு கட்டமைப்பு (CSAF) மூலம் அனுப்பப்படும் முறை

தற்போது செயல்படுத்தப்படவுள்ளது. கணினி மயமாக்கலின் காரணமாக துறை புள்ளி விவர சேகரிப்பை காகித அடிப்படையிலான கேள்விகளிலிருந்து மாறி, கையடக்க சாதனங்களுக்கு அதாவது கணினி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில், சிறு கணினி மூலம் மேற்கொள்ள மாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 16 திட்டங்களுக்கு தற்போது ELCOT நிறுவனம் மூலம் பொது கள ஆய்வு கணினிமயமாக்குதல் கட்டமைப்பை (CSAF) உருவாக்கப்பட்டு வருகிறது.

### 3.2.4 சமூக புள்ளிஇயல்

#### 3.2.4.1 தேசிய மாதிரி ஆய்வு

தேசிய மாதிரி கணக்கெடுப்பு 1950 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது இந்திய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் அடுத்தடுத்த சுற்றுகளில் நடத்தப்பட்ட ஒரு சமூக பொருளாதார ஆய்வு ஆகும். இது அறிவியல் மாதிரி முறைகளைப் பயன்படுத்தி தரவுகளை சேகரிக்கும். பல்வேறு நிலைகள் கொண்ட

ஓரடுக்கு வடிவமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு பல்வேறு பொருட்கள் குறித்து சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை வழங்குகிறது.

(i) தேசிய மாதிரி ஆய்வு 75–வது சுற்று (ஜூலை 2017 முதல் ஜூன் 2018) வரை நடைபெற்றது. குடும்ப நுகர்வுச் செலவினங்கள் மற்றும் சமூக நுகர்வானது, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய தலைப்புகளின் கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

(ii) தேசிய மாதிரி ஆய்வு 76–வது சுற்று (ஜூலை 2018 முதல் டிசம்பர் 2018 வரை) குடிநீர், சுகாதாரம், வீட்டு வசதிநிலை மற்றும் மாற்றுத் திறனாளிகள் குறித்த ஆய்வு ஆகியவற்றின் மீதான கணக்கெடுப்பு நடத்தப்பட்டன.

(iii) தேசிய மாதிரி ஆய்வு 77–வது சுற்று (ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019) வரை நடைபெற்றது. "நிலம் மற்றும் கால்நடை இருப்பு, விவசாயக் குடும்பங்களின் நிலை குறித்த ஆய்வு மற்றும் கடன் மற்றும் முதலீடு" ஆகியவைகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

(iv) தேசிய மாதிரி ஆய்வு 78–வது சுற்று (ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020). "உள்நாட்டு சுற்றுலா செலவினங்கள் மற்றும் பல்வேறு குறியீடு ஆய்வு (Multiple Indicator Survey)" ஆகியவைகள் குறித்த விவரங்கள் சேகரிக்க திட்டமிடப்பட்டன. கொரானா–19 பெருந்தொற்று காரணமாக உள்நாட்டு சுற்றுலா குறித்த ஆய்வு கைவிடப்பட்டது. மேலும், பல்வேறு குறியீடு ஆய்வு (Multiple Indicator Survey)–க்கான கால அளவு மார்ச் 2021 வரை நீட்டிக்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்

பட்டன. தேசிய மாதிரி ஆய்வு சுற்றுக்களில் பல்வேறு குறியீடு ஆய்வு (Multiple Indicator Survey) என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(V) தேசிய மாதிரி ஆய்வு 79–வது சுற்று (ஜூலை 2022 முதல் ஜூன் 2023) ஆயுஷ் ஆய்வு மற்றும் பற்றிய விரிவான வருடாந்திர மாற்றத் தகுந்த இணக்கமான ஆய்வு பற்றியது. 79–வது சுற்றுக்கான முதற்கட்டப் பயிற்சி அகில இந்திய பயிற்சியாளர்களின் பயிற்சி (AIWOT) வகுப்பு 08.03.2022 முதல் 10.03.2022 வரை இணையவழியாகவும், நேரடியாகவும் நடத்தப்பட்டது.

### 3.2.4.2 வீட்டு வசதி புள்ளிஇயல்

தேசிய அளவில் வீட்டு வசதி கொள்கை மற்றும் வீட்டு வசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டிடம்

சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. இந்த தரவு பரவலாக கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை, கட்டிடத்தின் சுற்று பரப்பு மற்றும் உட்பரப்பு வசிப்பிடங்களின் எண்ணிக்கை, குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள், மதிப்பிடப்பட்ட செலவு போன்றவற்றை உள்ளடக்கியது.

பொதுத்துறை மற்றும் தனியார் துறை வீட்டுவசதி புள்ளி விவரங்கள் மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இருந்து ஆண்டுதோறும் தனித்தனியாக சேகரிக்கப்படுகின்றன.

### 3.2.4.3 வீட்டு வசதி துவக்க குறியீடு (HSUI)

வீட்டுவசதி துவக்கக் குறியீட்டெண் திட்டத்தின் நோக்கம், வீட்டுவசதி தொடர்பான நிறுவனங்களுக்கு அடிப்படை / முன்கணிப்பு விவரங்களை அளிப்பதாகும். இந்நிறுவனங்கள் வீட்டுவசதி துவக்க குறியீட்டெண்ணுடன் மேலும் குறுகிய கால குறியீடுகள் மற்றும் கொள்கை திட்டங்களுடன்

இணைத்து வீட்டுவசதி வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

வீட்டுவசதி மற்றும் நகர்புற அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய கட்டிட நிறுவனம் (NBO) வீட்டுவசதி மற்றும் கட்டிட புள்ளி விவரங்களின் அடிப்படையில் வீட்டுவசதி துவக்க குறியீட்டை(HSUI) ரிசர்வ் வங்கியுடன் இணைந்து உருவாக்குகிறது. தமிழ்நாட்டில் 17 நகரங்கள் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை) தரவு சேகரிப்பு மற்றும் பரிமாற்றத்திற்காக 2014–15 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டன.

2021–22ஆம் ஆண்டு வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 நகரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு நேரடியாக இணைய வழி வாயிலாக தேசிய கட்டிட நிறுவனம் (NBO) புது டெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.2.4.4 கட்டிடக் கட்டுமானக் குறியீட்டெண் (BCCI)

கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை 16 மாவட்ட மையங்களில் இருந்து (சென்னை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை, நாகர்கோவில், மற்றும் உதகமண்டலம்) சேகரிக்கப்பட்டு கட்டிடக் கட்டுமான குறியீட்டெண் (அடிப்படை ஆண்டு 2011–12=100) கணிக்கப்பட்டு ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

16 மையங்களுக்காக கட்டிட கட்டுமான செலவின் குறியீடுகள் தொகுக்கப்பட்டு, 30.06.2021–ல் முடிவடைந்த காலாண்டுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### 3.2.5 தொழிற் புள்ளிவிவரங்கள்

### 3.2.5.1 ஆண்டுத் தொழில் ஆய்வு

தொழிற்சாலைச் சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)–இன் கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு நிலுவையில் உள்ள கடன்கள், உள்ளீடு மற்றும் வெளியீடு, மதிப்பு கூட்டுதல், தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் ஆகியவை குறித்த தொழிற்சாலை தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் மூலம் தமிழ்நாடு ஆண்டுத் தொழில் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்கள், மாநில வருவாய் மதிப்பீடுகளில் உற்பத்தி குறைக்கான மதிப்பு கூடுதல் கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தற்போது ஆண்டுத் தொழில் ஆய்வு 2018–19–ம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. மேலும், 2019–20–ம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் ஆய்வு மூலம் மேற்கண்ட

விவரங்கள் சேகரிக்கப்பட்டு கூர்ந்தாய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.5.2 தொழில் உற்பத்தி குறியீட்டெண்

தொழில் உற்பத்தி குறியீட்டெண், 2011–2012 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மாநில அளவில் உள்ள தொழிற்சாலைகளின் பொதுவான காரணிகளான உற்பத்தி விவரங்கள் மற்றும் பொருளாதார நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. மாதாந்திர அடிப்படையில் கனிமம் மற்றும் சுரங்கத் துறை, உற்பத்தித் துறை மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று முக்கிய தொழில் அமைப்புகளிலிருந்து உற்பத்தி குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

மாதாந்திர அறிக்கை, மூன்று துறைகளிலிருந்து, 253 இனங்களுக்கு பெறப்படுகின்ற உற்பத்தி விவரங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கனிம உற்பத்தி விவரங்கள் 8 இனங்களுக்கு மாநில கனிமம் (ம) சுரங்கத்துறை மற்றும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திலிருந்தும் பெறப்படுகின்றன. தொழிற்துறை

உற்பத்தி விவரங்கள் 244 இனங்களுக்கு, நேரடியாக 1244 தொழிற்சாலைகளிடமிருந்து உரிய படிவங்களில் பெறப்படுகின்றன. மின்சார உற்பத்தி, மத்திய மின்வாரியம், புதுடெல்லியிலிருந்து பெறப்படுகின்றது. இந்த உற்பத்தி விவரங்களைக் அடிப்படையாகக் கொண்டு துறைவாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் ஒவ்வொரு மாதமும் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. மாநில தொழில் உற்பத்தி குறியீட்டெண் 2021–22 ஆம் ஆண்டிற்கு டிசம்பர் 2021 வரை வெளியிடப்பட்டுள்ளது.

### 3.2.5.3 கைத்தறி

ஒவ்வொரு காலாண்டிலும் தமிழகத்தில் கைத்தறித் துணியின் மொத்த உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு சதவீதத்தை மதிப்பிடுவதும், ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளைக் கண்டறிவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 166 குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கைத்தறி திட்டத்தின் கீழ் 2020–2021ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது 2021–2022ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.


### 3.2.6 வேளாண்மை புள்ளி விவரங்கள் சேகரித்தல்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, **மாநில வேளாண்மை புள்ளிஇயல் ஆணைக்குழுவாக** (State Agricultural Statistics Authority – SASA) செயல்பட்டு

வருகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பாண்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மை துறையைச் சார்ந்துள்ளதால், விவசாய புள்ளி விவரங்களைச் சேகரித்தல் மற்றும் பராமரித்தல் மாநில பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. இத்துறையில் வேளாண்மை புள்ளி விவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப்பயன்பாடு, நீர்பாசனம், நில உடைமை, பயிர்க் காப்பீடு, விவசாயக்கூலி, விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுகிறது.

இத்துறையில் கீழ்க்கண்ட பல்வேறு விவசாயம் சார்ந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.2.6.1 பருவமும் பயிரும் அறிக்கை (2020–21)




நில பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரங்கள், நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி விகிதம் மற்றும் மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு, ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வொரு ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு ஒன்றிய

அரசு, மாநில அரசு மற்றும் இதர துறைகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளி விவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி மற்றும் விவசாயப் பொருளாதார குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன. 2019–20–ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2020–21ஆம் ஆண்டிற்கான அறிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.2.6.2 பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு

ஜமாபந்தியில் பயிர்ப் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும் முன்னர், 56 முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்பட்டு

குறித்த காலங்களில் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

### 3.2.6.3 பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள் எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)

பொது பயிர் மதிப்பீட்டய்வு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், உணவு மற்றும் உணவல்லாத 17 முதன்மைப் பயிர்களுக்கு மொத்தம் 9,500 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைகள் வேளாண் துறை அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அலுவலர்களால் இப்பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021–22 (பசலி–1431)ஆம் ஆண்டு 9500 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.2.6.4 பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகள்**

பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒவ்வொரு ஹெக்டெர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதாகும்.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, வாழை, பலா, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய 8 பழவகைப் பயிர்களும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய 5 காய்கறிப் பயிர்களும் அறுவடைப் பரிசோதனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2021–22 (பசலி –1431) ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 735 கிராமங்களில், 1470 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| பழங்கள் மற்றும் காய்கறிகள் | உற்பத்தி (டன்களில்) | | |
|---|---|---|---|
| | **2018-19** | **2019-20** | **2020-21** |
| மா | 524339 | 494728 | 639574 |
| வாழை | 3484599 | 3987895 | 3895645 |
| பலா | 54681 | 50056 | 69007 |
| திராட்சை | 45967 | 33106 | 50009 |
| கொய்யா | 44667 | 41504 | 92609 |
| ஆரஞ்சு | 2334 | 4723 | 2492 |
| எலுமிச்சை | 16301 | 15658 | 34786 |
| அன்னாசி | 30286 | 32463 | 41439 |
| தக்காளி | 396654 | 575141 | 935194 |
| வெண்டை | 80590 | 175243 | 204166 |
| கத்தரி | 137542 | 275956 | 346053 |
| முட்டைகோஸ் | 91478 | 185961 | 251982 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 8854 | 14383 | 12920 |

### 3.2.6.5 சிறுபான்மைப் பயிர்

சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒரு ஹெக்டேர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதாகும்.

சிறுபான்மைப் பயிர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய 8 சிறுபான்மைப் பயிர்களுக்கு அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2021–22 (பசலி – 1431) ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 650 கிராமங்களில், 1300 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| சிறுபாண்மைப் பயிர் | உற்பத்தி (டன்களில்) | | |
|---|---|---|---|
| | **2018-19** | **2019-20** | **2020-21** |
| மிளகாய் | 14000 | 29618 | 25057 |
| வெங்காயம் | 218595 | 261835 | 356939 |
| மஞ்சள் | 92361 | 96254 | 97830 |
| உருளைக்கிழங்கு | 49384 | 84720 | 73014 |
| கொத்தமல்லி | 2526 | 3675 | 1627 |
| மரவள்ளிக் கிழங்கு | 2629655 | 3065106 | 3893338 |
| முந்திரி | 19701 | 25687 | 25459 |
| இஞ்சி | 7279 | 3038 | 5991 |


### 3.2.6.6 பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

**"பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்"** கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப்

பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணக்கிடப்பட்டு வறட்சி வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகள் ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையினரால் பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப் படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டுக்கு காரிப் பருவத்திற்கு 25 பயிர்களுக்கு 25124 பரிசோதனைகளும், சிறப்புப் பருவத்தில் 4 பயிர்களுக்கு 45038 பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் 32 பயிர்களுக்கு 62372 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவினால் ஒத்திசைவு செய்யப்பட்டு

அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டு கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. 2022-23ஆம் ஆண்டு வேளாண் துறையினரால் பயிர்கள் அறிவிக்கைச் செய்யப்பட்டு பயிர்களுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.2.6.7 தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு




தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை கணிக்கப்படுதல், காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை, ஒரு தென்னை

மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில/மாவட்ட அளவில் ஒரு ஆண்டிற்கான மொத்த உற்பத்தி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜூலை முதல் ஜூன் வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டு தென்னை பயிருக்கு 379 கிராமங்களிலும், கமுகு பயிருக்கு64 கிராமங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2.6.8 மழைப்புள்ளி விவரம்

மழைப் புள்ளி விவரங்கள் வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, வனத்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் பேணப்படும். 597 சாதாரண / தானியங்கி மழைமானி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படுகிறது. இம்மழைப் புள்ளி விவரங்கள் மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்பட்டு அறிக்கையாக பேணப்பட்டு வருகின்றன.

### 3.2.6.9 நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்க தரவுகள்

நீர்ப்பாசன தரவுகள் கீழ்கண்ட மூன்று தலைப்புகளில் சேகரிக்கப்படுகிறது. அவை, ஆதார வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும் நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்கு பயன்படும் பரப்பு போன்றவையாகும். இத்தரவுகள் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் நீர்ப்பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

### 3.2.6.10 விவசாயக்கூலி

விவசாயக்கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது. அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் கூலி விவரங்கள்

களப் பணியாளர்களால் நேரடியாக சென்று சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்பட்டு அறிக்கைகளாக ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. 2022–23–ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.2.6.11 விற்பனை மிகுதித் திட்டம்

விற்பனை மிகுதித் திட்டத்தின் நோக்கம் மூன்று பருவங்களின் (குறுவை, சம்பா மற்றும் கோடை) இறுதியில், நெல் உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூலிக்கான நெல், விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து, உற்பத்தியில் விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல்லின் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றது. இத்திட்டம் 2022–23–ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.2.7 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்**

**3.2.7.1 பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (TRS)**

ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் எதேச்சை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கிராமங்களில் நில பயன்பாட்டு புள்ளி விவரங்கள் பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர் பரப்பில், உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் பயிர் விவரங்கள், ஒன்பது முக்கிய பயிர்களுக்கு காரிப், இராவி மற்றும் கோடை ஆகிய மூன்று பருவங்களுக்கு சேகரிக்கப்படுகின்றன. கிராமப் பதிவேடுகள் சரிவர பேணப்பட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வருவாய்த் துறை மூலம் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2021-22ஆம் ஆண்டு 3,480 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பயிர் பரப்பு விவரங்கள் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு, மாநில அளவிலான விவரங்களுடன் தொகுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

2022-23ஆம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும்.

### 3.2.7.2 பயிர் மேம்பாட்டுத் திட்டம் (ICS)

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மாநில அளவில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் மாதிரி சோதனையாக கிராம நிர்வாக அலுவலர்களால் பேணப்படும் பதிவேடுகளில் பயிர் பரப்பு மற்றும் அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் பராமரிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவு பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

இத்திட்டத்தின் நோக்கமானது, முதன்மை களப்பணியாளர்களாகிய கிராம நிர்வாக அலுவலர்களால் மாநில அளவில் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களின் முறையில் காணப்படும் குறைபாடுகளை,

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு அலுவலர்களால் மேற்பார்வை மூலம் கண்டறிந்து அவற்றை களைய தக்க வழி வகைகளை இத்திட்டத்தின் மேம்பாட்டிற்காக பரிந்துரை செய்வதாகும்.

இத்திட்டத்தின் முடிவுகளை ஒன்றிய அரசின் தேசிய புள்ளிஇயல் அலுவலகம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடுகள் ஆகிய முதன்மைத் தரவுகளின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படுகிறது. 2022-23ஆம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும்.

### 3.2.7.3. வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு 1970-71 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த கணக்கெடுப்பு வேளாண் கைப்பற்றுகளின் வகைகள் (தனி, கூட்டு மற்றும் நிறுவனம்) குத்தகைத் தன்மை, நிலக்கைப்பற்றுதாரர்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்பாசன தன்மை, பயிரிடும் வகை,

உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு போன்ற முக்கிய தகவல்களை அளிக்கின்றன.

2020–21–ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு பதினொன்றாவது வேளாண்மைக் கணக்கெடுப்பிற்கான முதன்மை கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல் கட்ட களப்பணி வருகின்ற ஜுலை மாதம் 2022 –ல் தொடங்கப்படவுள்ளது.

### 3.2.8 மாநில வருவாய் புள்ளி விவரங்கள் மதிப்பீடு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் மாநிலத்தின் வளர்ச்சியின் நிலையை கணிக்க அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு

நிதி நிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

### 3.2.8.1 மாநில வருவாய்

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011–12ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2018–19 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2019–20 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும் மற்றும் 2020–21 ஆம் ஆண்டிற்கு முன்மதிப்பீடு மற்றும் 2021–2022 ஆம் ஆண்டிற்கு (முன்மதிப்பீடு தற்காலிகம்) நடப்பு மற்றும் நிலையான (2011–12) விலையில் கணிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு

| (அடிப்படை ஆண்டு 2011–12) | | | | | | (ரூபாய் கோடியில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | ஆண்டு | மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி | | | | நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி | | | |
| | | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நிலையான (2011–12) விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நிலையான (2011–12) விலையில் | வளர்ச்சிவிகிதம் (%) |
| 1 | 2011–12 | 751486 | – | 751486 | – | 674478 | – | 674478 | – |
| 2 | 2012–13 | 854825 | 13.75 | 791824 | 5.37 | 768295 | 13.91 | 709343 | 5.17 |
| 3 | 2013–14 | 968530 | 13.3 | 851976 | 7.6 | 858870 | 11.79 | 750416 | 5.79 |
| 4 | 2014–15 | 1072678 | 10.75 | 893915 | 4.92 | 957350 | 11.47 | 791915 | 5.53 |
| 5 | 2015–16 | 1176500 | 9.68 | 967562 | 8.24 | 1057084 | 10.42 | 862437 | 8.91 |
| 6 | 2016–17 | 1302639 | 10.72 | 1036762 | 7.15 | 1171973 | 10.87 | 922084 | 6.92 |
| 7 | 2017–18 | 1465051 | 12.47 | 1125793 | 8.59 | 1317984 | 12.46 | 1000308 | 8.48 |
| 8 | 2018–19 (தி.ம.) | 1630209 | 11.27 | 1204667 | 7.01 | 1468449 | 11.42 | 1071602 | 7.13 |
| 9 | 2019–20 (து.ம) | 1797229 | 10.25 | 1278559 | 6.13 | 1619720 | 10.30 | 1133438 | 5.77 |
| 10 | 2020–21 (மு.ம) | 1902689 | 5.87 | 1296659 | 1. 42 | 1716544 | 5.98 | 1151371 | 1.58 |
| 11 | 2021–22 (மு.ம.த) | 2179655 | 14.56 | 1398426 | 7.85 | 1966476 | 14.56 | 1242892 | 7.95 |

தி.ம. – திருத்திய மதிப்பீடு ; து.ம – துரித மதிப்பீடு ; மு.ம.– முன் மதிப்பீடு , மு.ம.த.– முன்மதிப்பீடு தற்காலிகம்

## தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம்
## (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி NSDP)

(ரூபாயில்)

| வ. எண். | ஆண்டு | நடப்பு விலையில் | நிலையான (2011–12) விலையில் |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 93112 | 93112 |
| 2 | 2012–13 | 105340 | 97257 |
| 3 | 2013–14 | 116960 | 102191 |
| 4 | 2014–15 | 129494 | 107117 |
| 5 | 2015–16 | 142028 | 115875 |
| 6 | 2016–17 | 156595 | 123206 |
| 7 | 2017–18 | 175276 | 133029 |
| 8 | 2018–19 (தி.ம.) | 194373 | 141844 |
| 9 | 2019–20 ( து.ம) | 213396 | 149329 |
| 10 | 2020–21 (மு.ம.) | 225106 | 150990 |
| 11 | 2021–22 (மு.ம.த.) | 256935 | 162393 |

மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் 2011–12ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2011–12இல் இருந்து 2019–20 (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும் நிலையான விலையில் மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### 3.2.8.2 மாநில கணக்கு

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை, பொருளாதாரம் மற்றும் செயல்நோக்கு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.**2018–19 (Accounts), 2019–20 (Accounts), 2020–21 (RE)** மற்றும் **2021–22 (BE)** ஆகிய ஆண்டுகளுக்கு இறுதி முடிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குப் பிரிவு, உள்நாட்டு மொத்த உற்பத்தி மற்றும் மூலதன கணக்கு உருவாக்க மதிப்பீட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார மற்றும் செயல் நோக்கு அடிப்படையில் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின்

கணக்குகள் அதாவது தமிழ் நாட்டிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி (15), நகராட்சி (121), ஊராட்சி ஒன்றியம் (385) மற்றும் பேரூராட்சி (528) ஆகியவற்றிக்கு 2018–19 மற்றும் 2019–20ஆம் ஆண்டிற்கு வருவாய் மற்றும் செலவின கணக்குகள் தொகுக்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒன்றியமற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப் பட்டுள்ளது. 2020–21ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**3.2.8.3 மூலதன ஆக்கம்**

தேசிய புள்ளிஇயல் அலுவலகம் (NSO) வழிகாட்டுதலின்படி மாநில பொதுத்துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணக்கிடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மூலதன ஆக்க மதிப்பீடுகள் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்க உதவுகின்றன. இம்மதிப்பீடுகள் அரசிற்கு, சரியான கொள்கை முடிவு எடுப்பதற்கும் நாட்டின் பொருளாதார திட்டமிடுதலுக்கும் பயன்படுகின்றன. மாநிலத்தின் பொதுத்துறைகளுக்கான மொத்த

நிலையான மூலதன ஆக்க (**GFCF)** மதிப்பீடுகள் 2011–12ஐ புதிய அடிப்படை ஆண்டை **(2011–12)** கொண்டு, **2011–12** முதல் **2018–19** வரை கணிக்கிடப்பட்டு வருகிறது, அறிக்கை விரைவில் வெளியிடப் படவுள்ளது.

### 3.2.9 விலைவாசி மற்றும் விலைக் குறியீட்டெண்கள்

#### 3.2.9.1அங்காடி புலனாய்வு மற்றும் விலை புள்ளி விவரம்

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண் மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, அனுப்புகை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. வாராந்திர அறிக்கைகளை தொகுத்து, மாதாந்திர அறிக்கைகளாக மத்திய தொழிலாளர் செயலகம், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தென்னை மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகத்திற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், ஊழல் தடுப்பு துறை, சிறைத்துறை, அரசு

மருத்துவ மனைகள் மற்றும் இதர தொடர்புடைய துறைகள் விலை விவரங்களை கோரும்போது அவ்விவரங்கள் அளிக்கப்படுகிறது.

அரசின் முக்கிய கொள்கை முடிவுகள் உருவாக்குவதற்கும், விலை குறியீட்டெண்கள் தொகுப்பதற்கும் இந்த விலை விவரங்கள் அடிப்படையாக பயன்படுகின்றன.

### 3.2.9.2 மொத்த விலை குறியீட்டெண்

வேளாண் மற்றும் வேளாண் தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் மாநிலத்திலுள்ள தேர்தெடுக்கப்பட்ட மையங்களில் சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 2011–2012=100–ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக்குறியீட்டெண் கணித்து மாதந்தோறும் வெளியிடப்படுகிறது.

### 3.2.9.3 தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, சேலம், மதுரை, கோயமுத்தூர், குன்னூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மத்திய மையங்களுக்கு, ஆலைத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் 2016 = 100–ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு தொகுத்து வெளியிடப்படுகிறது. இக்குறியீட்ண்ணை தொகுப்பதற்கான விலை விவரங்கள் இத்துறை அலுவலர்களால் சேகரித்து நேரடியாக சிம்லாவிலுள்ள மத்திய தொழிலாளர் செயலகத்திற்கு அனுப்பப்படுகிறது.

கடலூர், நாகர்கோயில், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய 4 மாநில மையங்களுக்கு 2011 =100 ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு ஆலைத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது. இந்த குறியீட்டெண்கள்

அகவிலைப்படி, தினக்கூலி மற்றும் குறைந்தபட்ச கூலி ஆகியவை கணக்கிடப் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.2.9.4 மாவட்ட அளவிலான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)

மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண் (கிராமப்புறம், நகர்ப்புறம் மற்றும் இணைந்தது) தொகுத்து, திட்டங்களை பரவலாக்குவதற்கும், மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்து கொள்வதற்கும், குறிப்பிட்ட மண்டலம் அல்லது மாவட்டத்திற்குரிய இலக்குகளை அடைவதற்கான கொள்கைகளை வகுப்பதற்கும் பயன்படுகிறது.

தேசிய புள்ளி இயல் அலுவலகத்தின் வழிகாட்டு முறைகளின்படி 2019–2020–ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுக்கும் பணி இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுப்பதற்கு தமிழ்நாட்டின்

32 மாவட்டங்களில் உள்ள 153 கிராமப்புற மையங்கள் மற்றும் 145 நகர்ப்புற மையங்கள் ஆக மொத்தம் 298 மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பொருட்களின் தொகுப்பு (Commodity Basket) மற்றும் அடிப்படை ஆண்டு விலை விவரங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான மாவட்ட அளவிலான (கிராமப்புறம், நகர்புறம், இணைந்தது) நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.10 பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு என்பது வேளாண் மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்கள் (பயிர் உற்பத்தி, மலைத் தோட்டப்பயிர், பொது நிர்வாகம், இராணுவம், கட்டாய சமூகப் பாதுகாப்பு ஆகியவை தவிர), உற்பத்தி சார்ந்த மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அமைப்பு சாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களின் எண்ணிக்கையினை வழங்குகிறது, இது வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை கொண்டுள்ளது. மேலும், பொருளாதாரக் கணக்கெடுப்பானது பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளின் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மற்றும் செயல்படுத்துவதற்கு தேவைப்படும், தொழில்முனைவோர் குறித்த புள்ளி விவரம், நிறுவனங்கள் குறிப்பாக அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குவதாகும். பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் கட்டமைப்பு மாறிகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. மேலும், பொருளாதார நடவடிக்கைகளின் புவியியல் பரவல், நிறுவனங்களின் உரிமையாளர் வகை, பணியாளர்களின் எண்ணிக்கை போன்ற

தகவல்களை வழங்குகிறது, பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகிறது.

பொருளாதாரக் கணக்கெடுப்பு இந்திய அரசின் திட்டமாகும். இது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதுவரை ஆறு பொருளாதாரக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசால் இதுவரை நடத்தப்பட்டுள்ள அனைத்து பொருளாதாரக் கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்குபெற்றுள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

இந்திய அரசின் புள்ளிஇயல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநில அளவில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பில் தொடர்புடைய மாநில துறைகளை ஒருங்கிணைக்கும் துறையாக பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

செயல்படுகிறது. Common Service Center (CSC) e–Governance Services India Limited என்ற நிறுவனம் ஏழாவது மக்கள் தொகை கணக்கெடுப்பை செயல்படுத்தும் நிறுவனமாகும்.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் மேம்படுத்தப்பட்ட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு தொழில் நுட்ப பணிகள் இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட Common Service Center, e–Governance Services India Limited–Special Purpose Vehicle என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியினை செயல்படுத்துவது Common Service Center, e–Governance Services India Limited நிறுவனமாகும் (இந்திய அரசின் அரசிதழ் எண் 1749, நாள் 13.06.2019–இன்படி)

ஏழாவது கணக்கெடுப்பு பணியில் கணக்கெடுப்பு பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வை பணி (100%

மேற்பார்வை) Common Service Center, e–Governance Services India Limited நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. 10% கணக்கெடுப்பாளர்களின் பணியில் இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்பட்டது. இரண்டாம் நிலை மேற்பார்வை பணியில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலக அலுவலர்கள் மற்றும் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் தொழில் மற்றும் வர்த்தக துறையை சார்ந்த மாநில அலுவலர்கள் பங்கேற்றனர்.

ஏழவாது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணி தமிழ்நாட்டில் சுமுகமாக நடைபெற மாநில ஒருங்கிணைப்புக் குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்பு குழு (DLCC) மற்றும் பெருநகர சென்னை மகநகராட்சி ஒருங்கிணைப்புக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு–2019 களப்பணி "மாண்புமிகு தமிழக ஆளுநர்" அவர்களால் 09–10–2019 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத்

தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் ஏழவாது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி நிறைவடைந்துள்ளது. தற்போது, ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பின் தற்காலிக முடிவு விவரங்களை சரிபார்க்கும் பணி, இந்திய அரசின் புள்ளிஇயல் மற்றம் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.2.11 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

#### 3.2.11.1 குறிகாட்டிகளின் தொகுப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பதற்கு குறிகாட்டிகள் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. எனவே, தொடர்புத் துறைகளுடன் நடத்தப்பட்ட விரிவான தொடர் கலந்துரையாடல்களின் அடிப்படையில் 314 மாநிலக் குறிகாட்டிகள், 104 மாவட்டக் குறிகாட்டிகள் மற்றும் 93 வட்டாரக் குறிகாட்டிகள் அடங்கிய குறிகாட்டிகளின் தொகுப்பினை அரசு இறுதி செய்துள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதலின் ஒரு பகுதியாக, நகர்ப்புற (Urban) மற்றும் மீள் குடியேற்றப் பகுதிகள் (Resettlement) மேம்பாட்டிற்கு குறிகாட்டிகள் தொகுக்கப்படுகின்றன. மேலும், நகர்ப்புற மற்றும் மீள் குடியேற்றக் குறிகாட்டிகள் விரைவில் இறுதி செய்யப்படவுள்ளன.

### 3.2.11.2 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மின்னணுப் பலகை (SDG Dashboard)

சம்பந்தப்பட்ட தொடர்புத் துறைகள் (Line Departments) தங்களுடைய குறிகாட்டிகளின் புள்ளி விவரங்களை இணைய வழி மூலம் மின்னணுப் பலகையில் உள்ளீடு செய்ய ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)யால் உருவாக்கப்பட்ட மின்னணுப் பலகையானது இத்துறையின் மையக் குழு பங்களிப்புடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஜனவரி 2021 முதல் பயன்பாட்டில் உள்ளது. மாவட்டக் குறிகாட்டிகள் மற்றும் வட்டார குறிகாட்டிகளின் புள்ளி விவரங்களை நிகழ்நிலைப் பதிவேற்றம் (Online Uploading) செய்வதற்கு

மறுசீரமைப்பு செய்யப்பட்ட மின்னணுப் பலகையில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பலகையில் இலக்குகள், நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளின் செயல்திறனைக் காண காட்சிப்படுத்துவதற்கான கருவிகள் (Visualization Tools) உள்ளன.

### 3.2.11.3 திறன் மேம்பாடு

மின்னணுப் பலகையில் குறிகாட்டிகளின் புள்ளி விவரங்களை உள்ளீடு செய்வதற்கான பயிற்சி வகுப்புகள் தொடர்பு அலுவலர்கள், தொடர்புத் துறைகளின் தகவல் அமைப்பு மேலாண்மை அலுவலர்கள் மற்றும் இத்துறையின் மாவட்ட அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது.

### 3.2.11.4 பயிலரங்கம் / கருத்தரங்கம்

மாநில அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்திய குறியீடு 2020–21 மற்றும் பல்வேறு பரிமாண வறுமைக் குறியீடு தொடர்பான பயிலரங்கம் ஜீலை 2021–இல் குறிகாட்டிகள், தரவு

சேகரிப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் மேம்பாடுகளை பரிந்துரைப்பதற்காக நடத்தப்பட்டது.

மேலும், நோக்கங்களை அடைவதில் உரிய தொடர்பு துறைகள் வகுத்துள்ள செயல்பாடுகளை உள்ளடக்கிய பற்பரிமாண வறுமைக் குறியீட்டின் (Multidimensional Poverty Index) மாநில சீர்திருத்த செயல் திட்டத்தை (State Reform Action Plan) தயாரிக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

**3.2.11.5 கண்காணித்தல்**

இத்துறை ஆண்டுதோறும் NITI Aayog வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்திய குறியீட்டு அறிக்கையைப் பயன்படுத்தி பல்வேறு இலக்குகளின் செயல்திறனை பகுப்பாய்வு செய்கிறது. முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அது தொடர்பான இனங்களை அடையாளம் கண்டு மாற்று நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, பாதிக்கப்படக்கூடிய பகுதிகளை தொடர்புடைய துறைகளுக்குத் தெரிவித்து உரிய

தீர்வுகளைக் காண இத்துறை வழிவகை செய்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ், தொடர்புத் துறைகளுடன் ஒருங்கிணைந்து தரவுகள் சேகரிக்கும் பணியில் இத்துறையின் பங்களிப்பு முதன்மையானது.

### 3.2.12 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ 500 அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. அவைகளில் தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் பயிரும் அறிக்கை, மாவட்டப் புள்ளிஇயல் கையேடு போன்றவை முக்கிய வெளியீடுகளாகும்.

தமிழ்நாட்டின் 2020ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தகவல் தாள் (Fact Sheet) ஜூலை 2021ல் வெளியிடப்பட்டுள்ளது.

### 3.2.13 தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம், 2012–ஆம் ஆண்டில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் பணிபுரியும் அலுவலர்கள்

செயல்திறனை மேம்படுத்தவும், புள்ளி இயல் அறிவை வளப்படுத்துவதற்கு புள்ளிஇயல் பயிற்சி வழங்குவதற்காக நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் 01.05.2012 முதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை வளாகத்தில் இயக்குநர் மற்றும் துணை பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் புதியதாகப் பணியமர்த்தப்பட்ட புள்ளிஇயல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் புள்ளிஇயல் உதவி இயக்குநர்களுக்கு அறிமுகப் பயிற்சி மற்றும் இத்துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு உள்ளீட்டு பயற்சி அளிக்கின்றது. இரண்டு மாத கால அறிமுக பயிற்சியில் பொருளியல், புள்ளியியல் மற்றும் மக்கள் தொகையியல் ஆய்வு ஆகிய பிரிவுகளில் அடிப்படை கருத்துக்கள், துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது. துறையால் செயல்படுத்தப்படும் குறிப்பிட்ட திட்டங்களுக்கு குறித்த கால

இடைவெளியில் உள்ளீட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. கீழ்கண்ட விரிவான பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- ❖ பொருளியல், புள்ளியியல் மற்றும் மக்கள் தொகையியல் ஆய்வு பற்றிய அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் மேம்பட்ட புள்ளிஇயல் முறைகள்.
- ❖ தகவல் தொழில்நுட்ப வழிமுறைகள்.
- ❖ நிர்வாகம் மற்றும் நிதி தொடர்பான அலுவலக நடைமுறைகள்.
- ❖ நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் தரவு பகுப்பாய்வு குறித்த சிறப்பு பயிற்சி
- ❖ பெண்களுக்கு அதிகாரமளித்தல், தகவல் அறியும் உரிமை சட்டம் போன்ற பொதுவான தலைப்புகள்.

2021–22–ஆம் ஆண்டில், 648 அலுவலர்களுக்கு, 19 தொகுதிகளில், 15 பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2022–23–ஆம் ஆண்டில், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் 1171 அலுவலர்களுக்கு, 33 பயிற்சி திட்டங்கள் நடத்த தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

### 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் செயல்படுத்தி வருகின்றன. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974–ம் ஆண்டு முதல் செயல்பட துவங்கி, அதன் பணியாக, மக்களின் பார்வை மற்றும் கருத்துக்களின் அடிப்படையிலும் திட்டத்தை செயல்படுத்தும் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்தும் திட்டங்களின் விளைவுகள் மற்றும் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்து அரசுக்கு எடுத்துரைத்து வருகிறது. மதிப்பீட்டு அறிக்கைகள் அரசு கொள்கை முடிவு எடுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் திட்ட மேம்பாட்டிற்கான திருத்தம் மேற்கொள்ள உதவுகிறது.

இத்துறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், வேளாண்மை, கல்வி, வனம், சுகாதாரம், வீட்டுவசதி, தோட்டக்கலை, நீர்ப்பாசனம், ஊரக வளர்ச்சி, சமூக நலன், போக்குவரத்து போன்ற பல்வேறு

துறைகளில் இதுவரை 793 மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் முடிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

### 3.3.1 துறையின் முக்கியப் பணிகள்

i). ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்கள், வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

ii). 'தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

### 3.3.2 துறையின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையானது, இத்துறையின் நிர்வாகத் தலைமையாகவும் மற்றும் துறையின் செயல்பாட்டை நிர்வகிப்பது, வழிநடத்துவது, ஊக்கப்படுத்துவது, மேம்படுத்துவது போன்ற பணிகளை செய்கின்றது. இத்துறையின் செயல்பாடுகள் இரண்டு மாநில அளவிலான அமைப்புகள் அதாவது, மாநில மதிப்பீட்டுக்

குழு (SEC) மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) மூலம் கண்காணிக்கப்படுகிறது.

### 3.3.2.1 மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)

மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக செயல்படும், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை ஆய்வுக்கான மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை தெரிவு செய்கிறார். 2021–2022 ஆம் ஆண்டிற்கு இருபத்து ஒன்று (21) மதிப்பீட்டாய்வுகளுக்கு மாநில மதிப்பீட்டுக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

### 3.3.2.2 மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB)

மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவானது, மாநில திட்டக் குழுவின் துணை தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் அங்கம்

வகிப்பார்கள். மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) கீழ்கண்டவற்றிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- செயல்முறையியல்களுக்கான ஆய்வுகள்
- மதிப்பீட்டாய்வின் இறுதி முடிவு செய்யப்படுவதற்கு முன்னர் இடைக்கால அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை மறு ஆய்வு செய்தல்
- இத்துறையினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளை ஆலோசித்தல்
- திட்டங்களுக்கான மதிப்பீடுகளை பரிந்துரை செய்தல்.

2021–2022 ஆம் ஆண்டில் மூன்று மதிப்பீட்டு ஆய்வறிக்கைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 3.3.3 செயல்திறன்

ஆய்விற்காக உள்ள 37 மொத்த மதிப்பீட்டு ஆய்வுகளின் பல்வேறு நிலைகள் பின்வருமாறு :

2021–2022 ல் மாநில மதிப்பீட்டுக் குழுவால் ஒதுக்கப்பட்ட 21 ஆய்வுகளுக்கான அடிப்படை விவரங்கள் மற்றும் ஆய்வுக்கான செயல்முறையியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 3 ஆய்வுகள் அரசின் இறுதி அறிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டும். 3 மதிப்பீட்டு ஆய்வுகள் வரைவு அறிக்கை நிலையிலும், 1 ஆய்வு தரவு பகுப்பாய்வு மற்றும் அட்டவணை தயாரிப்பு நிலையிலும், 2 ஆய்வுகளுக்கான களப்பணி நிலையிலும் மற்றும் 6 ஆய்வுகள் களப்பணி மேற்கொள்ள தயார் நிலையிலும் உள்ளன மற்றும் 1 ஆய்வு வினாத்தாள் தயாரிப்பு பணி இறுதியாக்கம் செய்யப்பட்ட நிலையிலும் உள்ளது.

### 3.3.4 மதிப்பீட்டு ஆய்வு முறை

மாநில மதிப்பீட்டுக் குழு இத்துறை மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ள, அடிப்படை விவரங்கள் மற்றும் ஒப்பந்த விதிமுறைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட துறையிலிருந்து சேகரிக்கப்பட்டு மாதிரி வடிவமைப்புடன் கூடிய செயல்முறையியல்கள் வடிவமைக்க ஒப்புதல் அளிக்கிறது. மாநில மதிப்பீட்டு

ஆலோசனைக் குழுவில் இம்முறையியல்கள் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது. ஒப்புதலின் பேரில் ஆய்வின் குறிக்கோளுக்கான அட்டவணைகள் / கேள்வித் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. அட்டவணைகள் / கேள்வித்தாள்கள் மென்பொருள் பயன்பாட்டில் பதிவேற்றப்பட்டு, ஓட்டம் மற்றும் சரியான தன்மையை சரிபார்க்க மாதிரி களப்பணியின்போது கேள்வித்தாள் சோதனை செய்யப்படுகிறது. மேலும், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை சேகரிக்க தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் களப்பணிகள் நடத்தப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் அட்டவணைப் படுத்தப்பட்டு வரைவு அறிக்கைத் தயாரிக்கப்பட்டு, கருத்துக்கள் கேட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகிறது. இறுதி செய்யப்பட்ட ஆய்வு அறிக்கை பின்னர் ஒப்புதலுக்காக மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் அங்கீகரிக்கப்பட்டதும், அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறையின்

தொடர் நடவடிக்கைக்காக மாநில திட்டக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது.

### 3.3.5 மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு ஆய்வுகளின் வகைகள்

- **தேவைகள் மதிப்பீடு**

தேவைகள் மதிப்பீடு என்பது தற்போதைய நிலை மற்றும் விரும்பிய நிலை ஆகியவற்றுக்கு இடையே உள்ள சிக்கலைத் தீர்க்கத் தேவையான சேவை வழங்களை தீர்மானிக்கிறது.

- **செயல்முறை கோட்பாடு மதிப்பீடு**

ஒரு செயல்முறை திட்டமிடப்பட்ட விளைவுகளை அடையக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பிடுகிறது. செயல்முறைக்குப் பின்னால் உள்ள கோட்பாட்டை மாதிரியாக்குகிறது மற்றும் ஒரு செயல்முறையின் உள்ளீடுகள் மற்றும் அதன் இறுதி இலக்குக்கு இடையிலான காரண பாதையை பட்டியலிடுவதை உள்ளடக்குகிறது.

- **செயல்முறை மதிப்பீடு**

செயல்முறை மதிப்பீடுகள், வேலைத் திட்டங்களுக்கு மாதிரிகளின் செயல்பாடுகள், செயல்படுத்தல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றின் செயல்திறனை பகுப்பாய்வு செய்கின்றன. எப்போதும் இந்தத் துறையால் எடுக்கப்பட்ட அனைத்து மதிப்பீட்டு ஆய்வுகளும் செயல்முறை பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றன.

- **தாக்க மதிப்பீடு**

ஒரு தாக்க மதிப்பீடு, திட்டங்களின் தாக்கத்தையும், அதன் காரணமாக ஏற்படும் முக்கிய விளைவுகளையும் அடையாளம் காட்டுகிறது.

- **பயனுள்ள செலவு பகுப்பாய்வு**

பயனுள்ள செலவு பகுப்பாய்வானது ஒரே நோக்கத்தை அடைவதை நோக்கமாகக் கொண்ட வெவ்வேறு சூழல்கள் மற்றும் காலகட்டங்களில் இயங்கும் பல்வேறு திட்டங்களின் தாக்கங்கள் மற்றும் செலவுகளை ஒப்பீடு செய்வதாகும்.

### 3.3.6 மின்னணு மதிப்பீட்டு முறை

மின்னணு மதிப்பீட்டு முறையின் கீழ் – துறைக்கான இணையதளம் உருவாக்கப்பட்டு, வன்பொருள் மற்றும் மென்பொருள் பயன்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன. வினாத்தாளை உருவாக்குதல், சிறுகணினியில் தரவைப் பதிவேற்றுதல் மற்றும் சேகரிப்பது, தரமான தரவு சேகரிப்பு மற்றும் தரவைச் செயலாக்குவதில் திறன் ஆகியவற்றை மேம்படுத்த மென்பொருள் பயன்பாடு குறித்து பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2018 முதல் இதுவரை களத்தில் இருந்து முதன்மைத் தரவைச் சேகரிப்பதற்காக சிறுகணினிகளைப் பயன்படுத்தி 39 மதிப்பீட்டு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 3.3.7 J–PAL செயல்பாடுகள்

அமெரிக்காவில் உள்ள மாசாசூசெட்ஸ் நிறுவனத்தில் செயல்படும் தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீஃப் ஜமில் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் (Abdul Latif Jameel – Poverty Action Lab) (J–PAL–SA) மூலம் திறன் மேம்பாடு

பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களில் திறன் மேம்பாட்டை வழங்கியுள்ளது மற்றும் மின்னணு தரவு சேகரிப்பு முறையைப் பின்பற்றவும் செய்துள்ளது. பொதுவான ஒப்பந்த விதிமுறைகளுக்கான தொகுப்பு, செலவு மதிப்பீட்டு தொகை, கோரிக்கைக்கான வேண்டுகோளின்படி வெளிமதிப்பீட்டாய்வு நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதற்கும் மற்றும் வெளிநிறுவனங்களின் ஆய்விற்கான தொழில்நுட்ப திறனை மதிப்பிடுவதற்கும் தேவையான திறன் மேம்பாட்டை வழங்கியுள்ளது.

### 3.3.8 மதிப்பீடு ஆய்வுக்கான வழிகாட்டி முறை

கொள்கை முடிவெடுப்பதில் மதிப்பீட்டின் பங்கை வலுப்படுத்தவும் புதிய கொள்கை உருவாக்குவதற்கும், செயல்பாட்டில் உள்ள திட்டங்களை ஆய்வு செய்யவும் மற்றும் திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் அல்லது நீக்கம் செய்யவும், பல்வேறு அரசு துறைகளால் மதிப்பீட்டு ஆய்வுகளை வடிவமைக்கவும், புரிந்துகொள்ளவும் மற்றும் செயல்படுத்துவதற்கான

பொதுவான மதிப்பீட்டாய்வு வழிகாட்டுதல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

26.07.2021 அன்று நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில், ஆண்டுக்கு ரூ.150 கோடிக்கு மேல் நிதியுதவி உள்ள அனைத்து அரசு மாநில நிதியுதவி திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ள இந்தத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மதிப்பீட்டு வழிகாட்டுதலின்படி எந்த விதமான தாமதமும் இன்றி மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 2 சதவீத கட்டாயக் கட்டணத்தைப் பயன்படுத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது. மேலும் 14.12.2021 அன்று நடைபெற்ற அரசு தலைமைச் செயலாளரின் ஆய்வுக் கூட்டத்தில், ரூ.150 கோடிக்கு மேல் செலவாகும் திட்டங்களுக்காக மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ள வெளி மதிப்பீட்டாய்வு நிறுவனங்களை அமர்த்திக் கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்படி ரூபாய் 150 கோடி மற்றும் அதற்கு மேல் செலவாகும் மாநில திட்டங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வுகளை

மேற்கொள்வதற்கு செலவு மதிப்பீட்டுத் தொகை மற்றும் காலக்கெடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.3.9 வெளி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள்

தொழில்நுட்ப நிலையின் அடிப்படையில் ஆய்வுகள் வழிகாட்டுதலின் மதிப்பீட்டிற்கான கட்டமைப்பின்படி பரந்த புவி இடஞ்சார்ந்த பிரதிநிதித்துவத்துடன் கூடிய மாதிரி அளவு மற்றும் வெளிப்புற சரிபார்ப்பு தேவைப்படும் ஆய்வுகள் வெளிநிறுவனங்கள் மூலம் செய்யப்பட வேண்டும். பயனுள்ள மற்றும் திறமையான கொள்கை முடிவெடுப்பதற்கான மதிப்பீட்டு ஆய்வுகளை சரியான நேரத்தில் முடிக்க இந்த ஆண்டு ஆறு மதிப்பீட்டு ஆய்வுகளை வெளிநிறுவனங்கள் மூலம் செய்ய இந்தத் துறை முன்மொழிந்துள்ளது. வெளிநிறுவனங்கள் மூலம் ஆய்வுகளை செய்ய முகமைகளை தேர்ந்தெடுக்க DMEO ஆல் வழங்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற பட்டியல் பயன்படுத்தப்படும்.

### 3.3.10 வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்துடனான (DMEO) நோக்க அறிக்கை

வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகம் (DMEO) என்பது நித்தி ஆயோக்கின் (NITI Aayog) இணைக்கப்பட்ட அலுவலகமாகும். இது வளர்ச்சிக்கான இடையூறுகளை தகர்த்து அரசாங்கங்களை வலுப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுவதற்கான பணியை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. (DMEO)–வின் முக்கிய நோக்கம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் நாட்டிற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் திறனை வலுப்படுத்துவதாகும். திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை தமிழ்நாடு மற்றும் DMEO, NITI Aayog ஆகியவை இணைந்து 08.07.2021 அன்று நோக்க அறிக்கையில் (SoI) கையெழுத்திட்டுள்ளன. ஒருங்கிணைந்த நிறுவன உறவுகளுக்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கும், மேலும் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு செயல்முறை ஆராய்ச்சித் துறையின்

ஒத்துழைப்பை ஊக்குவிப்பதையும் மற்றும் மேம்படுத்துவதையும் நோக்க அறிக்கை (SoI) வலியுறுத்துகிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது மாநிலத்தில் வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகம் DMEO உடனான (SoI) ஐ செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புத் துறையாகும். DMEO NITI Aayog உடன் SOI ஐ செயல்படுத்துவதற்கான வரைவு செயலாக்கத் திட்டம் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது.

### 3.4 சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்

1975–76லிருந்து 2014–2015 வரை மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP), மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (WGDP) திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) தொடங்கப்பட்டது.

2015–16 ஒன்றிய அரசின் வரவுசெலவு திட்டத்தில், ஒன்றிய அரசு மேற்படி திட்டங்களை மாநில அரசு, தன் சொந்த மாநில நிதியிலிருந்து தொடரலாம் என அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு 2015–16 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ.75.00 கோடி நிதி உதவியுடன் தமிழகத்தில் அமைந்துள்ள மலைப் பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது.

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் பின் வரும் 11 மாவட்டங்களில் திட்ட இயக்குநர், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம், உதகமண்டலம் அவர்களின் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. நீலகிரி
2. கோயம்புத்தூர்
3. திருப்பூர்
4. ஈரோடு
5. திண்டுக்கல்
6. கன்னியாகுமரி
7. மதுரை
8. தேனி
9. திருநெல்வேலி
10. விருதுநகர்
11. தென்காசி

தமிழ்நாட்டில் சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து 600 மீட்டருக்கு

மேலான மலைப் பகுதிகளில் திட்டம் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும்.

இத்திட்டத்தில் வனம், குடியிருப்புப் பகுதிக்கு அருகில் அமையப்பெறாத மண்வளம் மற்றும் நீர் வளத்திற்கு சவாலாகப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கும் இடைப்பட்ட பகுதியின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது, நீர் மற்றும் நில வளர்ச்சிக்கும் மனித வாழ்வாதாரத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துதலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நீர்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் நுண்நீர் பிடிப்புப் பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மண்வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண்மை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் ஊரக

உள்ளாட்சி அமைப்பின் கட்டமைப்பில் இடைவெளி நிரப்பும் விதமாக பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர்வள மேம்பாடு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பணிகள் தொடர்புடைய துறைகளின் மூலம் மேற்கொள்ளும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட மேலாண்மைக்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்புத் துறையாக(SLND) விளங்குகிறது. .

இத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் நிர்வாகத் துறைகள் மூலம் பெறப்பட்டு அரசுதலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவால் (Project Sanctioning and Monitoring Committee (PSMC) திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.75.00 கோடி நிதி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு இதுவரை மார்ச், 2022 முடிய **2549** திட்டங்களுக்கு ரூ.**422.87** கோடி அளவிற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டிற்காக வரவு செலவு திட்டத்தில் ரூ.75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளை விரைவாக கண்காணிக்கும் பொருட்டு இணைய தளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

## 4.0 சிறப்பு முயற்சிகள் துறை

சிறப்பு முயற்சிகள் துறை, பல்வேறு தரப்புகளில் உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை, சம்பந்தப்பட்ட நிர்வாக துறைகள் மற்றும் அவற்றின் தொடர்புடைய துறைகளைக் கலந்தாலோசித்து செயல்படுத்துவதற்காக 2003 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வாறாக, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் பெயர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை என்று மாற்றம் செய்யப்பட்டது. இத்துறை தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் முதன்மையான திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### சென்னை மெட்ரோ இரயில்

சென்னை பெருநகர்ப் பகுதி, 98 இலட்சம் மக்கள் தொகையுடன் (ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம்–2018) 1189 சதுர கி.மீ அளவிற்கு பரவியுள்ளது. இந்த பகுதி மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும்

பெருந்திரள் விரைவு இரயில் போக்குவரத்து கட்டமைப்புகளை (Mass Rapid Transit System) கொண்ட ஒரு பொதுப் போக்குவரத்து கட்டமைப்பை கொண்டதாகும். பெருகி வரும் போக்குவரத்து தேவையைக் கருத்தில் கொண்டும் போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசினை கட்டுப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு, இரயில் சார்ந்த பெருந்திரள் போக்குவரத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்தது. பொதுப் போக்குவரத்தின் பங்கினை 28 சதவீதத்திலிருந்து (2018), 2048 இல் 50 சதவீதமாக உயர்த்துவதே இந்த அரசின் நோக்கமாகும்.

**1. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிறுவனங்கள் சட்டத்தின்படி, (Companies Act) மாநில அரசிற்கு சொந்தமான சிறப்பு வகை நிறுவனமாக, டிசம்பர் 2007இல் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற சமபங்கு வீதத்தில் இந்நிறுவனம் கூட்டு முயற்சி

நிறுவனமாக 2009ல் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, ஒன்றிய அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் அரசு செயலாளரை, தலைவராக கொண்டு ஐந்து இயக்குநர்களை நியமனம் செய்கிறது. அதே போன்று, மாநில அரசு மேலாண்மை இயக்குநர் உட்பட ஐந்து இயக்குநர்களை நியமிக்கிறது. மேலும், இயக்குநர் குழுமத்தில் மூன்று செயல் இயக்குநர்கள் உள்ளனர்.

## 2. சென்னை மெட்ரோ இரயில் திட்டங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டமானது, விமான போக்குவரத்து, தொலைதூர இரயில்கள் மற்றும் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் விரைவு போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய பொது மற்றும் தனியார் போக்குவரத்து அமைப்புகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான, நம்பத் தகுந்த, திறன்மிக்க, மாசற்ற மற்றும் நீடித்த பொதுப் போக்குவரத்தாகும். சென்னை மெட்ரோ இரயில் திட்டம் வாழ்க்கையில் வசதியை ஏற்படுத்துதல்,

உற்பத்தித் திறனை அதிகரித்தல், நகரத்தின் மாசற்ற மற்றும் நீடித்த வளர்ச்சியையும் ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. சென்னையின் மெட்ரோ இரயில் கட்டமைப்பிற்கு அதிக முதலீடுகள் தேவைப்படுவதால் கட்டங்களாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.1 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்– கட்டம்–I**

வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான ஒரு வழித்தடமும், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான மற்றொரு வழித்தடமும் என இரண்டு வழித்தடங்கள் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–I 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. மாநில அரசு, இத்திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் நிதியுதவியும் வெளிநாட்டு நிதியுதவியும் பெறுவதற்காக பரிந்துரைத்தது. ஒன்றிய அரசு, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், கட்டம்–Iன் கீழ், இரண்டு வழித்தடங்களை

செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியது. 45.1 கி.மீ நீளத்திலான இத்திட்டம் ரூ.14,600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசும் மற்றும் ஒன்றிய அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில் செயல்படுத்தும் வகையில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

கட்டம்–I ன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ இரயில் வழித்தடங்களின் விவரங்கள் வருமாறு:

| வழித்தடங்கள் | உயர்த்தப் பட்டவை | சுரங்கப் பாதை | மொத்தம் |
|---|---|---|---|
| வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையில் (கி.மீ) | 8.8 | 14.3 | 23.1 |
| சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையில் (கி.மீ) | 12.3 | 9.7 | 22.0 |
| **மொத்த நீளம் (கி.மீ)** | **21.1** | **24.0** | **45.1** |
| மெட்ரோ இரயில் நிலையங்கள் | 13 | 19 | 32 |

கட்டம்–I ன் கீழ், பயணிகள் சேவைகள் பல்வேறு நிலைகளில் பணிகள் முடிவுற்றதையும், பணிமனைக்கு இணைப்பு ஏற்படுவதன் அடிப்படையிலும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொடங்கி வைக்கப்பட்டன:

| **தொடங்கி வைக்கப்பட்ட நாள்** | **கி.மீ** | **வழித்தடப்பகுதி** |
|---|---|---|
| 29–06–2015 | 10.15 | கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையில் (உயர்த்தப்பட்டவை) |
| 21–09–2016 | 8.60 | சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையில் (உயர்த்தப் பட்டவை) |
| | 1.20 | ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் (உயர்த்தப்பட்டவை) |
| 14–05–2017 | 7.40 | கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையில் (சுரங்கப்பாதை) |
| 25–05–2018 | 2.50 | நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வரையில் (சுரங்கப்பாதை) |
| | 4.35 | சின்னமலை முதல் ஏஜி–டிஎம் எஸ் வரையில் (சுரங்கப்பாதை) |
| 10–02–2019 | 10.90 | ஏஜி–டிஎம் எஸ் முதல் வண்ணாரப் பேட்டை வரையில் (சுரங்கப்பாதை) |
| **மொத்தம்** | 45.10 | |

இத் திட்ட மதிப்பீடு ரூ.14,600 கோடியிலிருந்து ரூ.18,379.92 கோடியாக திருத்தியமைக்கப்பட்டு மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் ஒப்புதல் 2021–ல் பெறப்பட்டது. திருத்திய பங்களிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.00%), ரூ.2752.36 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (14.98%) வழங்கியுள்ளது. அதே போன்று ஒன்றிய அரசு, ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.01%), ரூ.730.00 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (3.97%) வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ.8646.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக்கடனாக நேரடியாக செல்லும் நிதியுதவியாக (Pass Through Assistance– 47.04%) பெறப்பட்டது.

## 2.2 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம் –I இன் நீட்டிப்பு

தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – I இன் வழித்தடம் – 1 ஐ வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் /

விம்கோ நகர் வரையில் 9.051 கி.மீ நீளத்திற்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டக் கருத்துரு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகவும், அதன் நிதியுதவிக்காகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறுவதற்காகவும் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தை ரூ.3770 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 15-06-2016 அன்று ஒன்றிய அரசு வழங்கியது. கட்டுமானப் பணிகள் 23-07-2016 அன்று தொடங்கப்பட்டு, பணிகளை மேற்கொள்கின்ற காலத்தில், கோவிட் பெருந்தொற்று பரவுவதைத் தடுப்பதற்கான கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் பணிகள் முடிவுற்று, 14-2-2021 அன்று பயணிகள் சேவை தொடங்கி வைக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு, ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.599.27 கோடியை சார்நிலைக் கடனாகவும் கட்டம் - I இன் நீட்டிப்பு திட்டத்திற்காக வழங்கியுள்ளது. அதே போன்று, ஒன்றிய அரசு

ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.205.00 கோடியை சார் நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. ரூ.2141.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக்கடனாக நேரடியாக செல்லும் நிதியுதவியாக (Pass Through Assistance) பெறப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – Iஇன் கீழ், 54.1 கி.மீ நீள வழித்தடங்களில் முழுமையான பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது. பெருந்தொற்று மற்றும் அதற்கான கட்டுப்பாடுகள் குறையத் தொடங்கியவுடன், பயணிகள் எண்ணிக்கை, கடந்த சில மாதங்களில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மார்ச் 2022–இல் பயணிகள் எண்ணிக்கை ஒரு நாளில் 2 இலட்சம் என்ற உச்சத்தைத் தொட்டுள்ளது மற்றும் அம்மாதத்தில் 44.6 இலட்சம் பயணிகள் மெட்ரோ இரயிலைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்துதல், தள்ளுபடி கட்டணத்துடன் கூடிய பயண அட்டைகள், எளிதில் அணுகும் வகையில்

மெட்ரோ நிலையங்களின் மேம்பாடு மற்றும் பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம் மற்றும் மத்திய சதுக்கம் போன்றவை பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பின் அடையாளங்கள் மற்றும் சிறப்பான உதாரணங்கள் ஆகும். இதனால் ஒரு போக்குவரத்து அமைப்பிலிருந்து மற்றொரு போக்குவரத்து அமைப்பிற்கு பயணிகள் எளிதாக மாற இயலும். இத்திட்டங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. 16-12-2021 அன்று கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கமும் 30-03-2022 அன்று மத்திய சதுக்கமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன. கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30-11-2021 அன்று 12 சிறிய பேருந்துகள் இணைப்பு சேவைகளாக துவக்கி வைக்கப்பட்டன.

இவற்றின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு சிறிய பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். கடைசி மைல் இணைப்பின் இதர முறைகளான மிடுக்கு இருசக்கர வாகனங்கள் (Smart Bikes,), உபர் (Uber), ஓலா (Ola), ஷேர் ஆட்டோ (Share Auto) போன்றவை ஊக்குவிக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**2.3 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்– கட்டம்–II**

மூன்று வழித்தடங்களை உள்ளடக்கிய 107.55 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II ற்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி பங்களிப்பிற்காகவும் இருதரப்பு மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் நிதியுதவிக்காகவும் பரிந்துரை செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர்ப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கையின் அடிப்படையில், கட்டம் – II இல் உள்ள வழித்தடங்களில் ஒன்றான வழித்தடம்–4 ஐ

கலங்கரை விளக்கத்திலிருந்து வடபழனி மற்றும் போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பதற்கும், திட்டச் செலவினை குறைப்பதற்காக வழித்தடம் – 5இல் சில சுரங்கப்பாதை வழித்தடப் பகுதிகளை உயர்த்தப்பட்டவைகளாக மாற்றுவதற்கும் அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில் ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை திருவாளர்கள் ரைட்ஸ் (RITES) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–II ற்கு கொள்கையளவிலான ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு வழங்கியது. கட்டம் – IIன் திட்டம் ரூ.69,180 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டு நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை பரிந்துரைக்கப்பட்டது.

இதனிடையே, மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான மதிப்பீட்டு அளவுகோல் (Benchmarking cost) குறித்த வீட்டுவசதி மற்றும்

நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆலோசனைகளின் அடிப்படையிலும், ஒன்றிய அரசின் புதிய மெட்ரோ இரயில் கொள்கையின் அடிப்படையிலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இன் செலவு மதிப்பீடு ரூ.61,843 கோடியாகவும், கட்டுமான காலத்திற்கான வட்டி மற்றும் முன் இறுதிக்கட்டணத்தைச் சேர்த்து ரூ.63,246 கோடியாகவும் திருத்தியமைக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் –Iற்கு வழங்கியதைப் போல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் –IIற்கும் 50:50 என்ற சமவீதப் பங்களிப்பு அடிப்படையில் ஒப்புதல் வழங்குமாறு ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டமானது, இந்தியாவிலேயே ஒரே கட்டத்தில் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய மெட்ரோ இரயில் திட்டமாக அமைந்துள்ளது.

கட்டம்–II வழித்தடங்களின் விவரங்கள் பின்வருமாறு

- **வழித்தடம்–3** : மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையுள்ள (45.8 கி.மீ) – வடக்கு – தெற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில், மென்பொருள் வழித்தடம், அடையார், மயிலை மற்றும் புரசைவாக்கம் போன்ற முக்கியப் பகுதிகள் இணைக்கப்படுகிறது;
- **வழித்தடம்–4** : கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலையானது (26.1 கி.மீ) – கிழக்கு மேற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில் நகரின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, போரூர் மற்றும் பூவிருந்தவல்லி ஆகியவை இணைக்கப்படுகிறது;
- **வழித்தடம்–5** : மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை (47.0 கி.மீ) – சுற்று வட்ட வழித்தடமான இவ்வழித்தடத்தில் வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம்,

இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்படுகிறது;

கட்டம்–IIன்கீழ் கருதப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| **வழித்தடங்கள்** | **உயர்த்தப்பட்ட இரயில் நிலையங்கள்** | **சுரங்கப் பாதை இரயில் நிலையங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| வழித்தடம்–3 | 20 | 30 | 50 |
| வழித்தடம்–4 | 18 | 12 | 30 |
| வழித்தடம்–5 | 42 | 6 | 48 |
| **மொத்தம்** | **80** | **48** | **128** |

வழித்தடம்–3 இல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67கி.மீ), வழித்தடம்–5இல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் வரையிலும் (16.34கி.மீ) – மொத்தம் 52.01 கி.மீ நீள வழித்தடத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு

முகமையுடன் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடன் வழங்க இறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரையில், இத்திட்டத்தைத் தற்காலிகமாக "மாநில அரசு திட்டமாகக்" கருதி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியளிக்கும் வழித்தடப்பகுதிகளை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாநில அரசு வழங்கியது. கடன் தொகையின் முதல் தவணை 75 பில்லியன் 519 மில்லியன் ஜப்பான் யென் ஆகும். இரண்டாவது தவணை கடனான 73 பில்லியன் ஜப்பான் யென்னுக்கும் 31-03-2022 அன்று கையெழுத்தாகியுள்ளது.

கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை வரையிலான (26.1 கி.மீ) வழித்தடம்-4, வழித்தடம்-3 இல் சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி (சிப்காட்) வரை (10.13 கி.மீ) மற்றும் வழித்தடம்-5 இல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல்

சோழிங்கநல்லூர் வரையிலான (30.66 கி.மீ) எஞ்சிய வழித்தடப்பகுதிகளை செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு பின்னர் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில், தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வழித்தடம்–4 முழுமையாகவும் வழித்தடம்–3 மற்றும் வழித்தடம்–5 இல் எஞ்சிய வழித்தடப்பகுதிகளையும் செயல்படுத்துவதற்காக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

2021–2022 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்ட உரையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் – IIற்கான நிதி பங்களிப்பு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, இத்திட்டம் சமபங்களிப்பு முறையில் ஒன்றிய அரசின் திட்டமாக செயல்படுத்த

பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மாநில அரசின் நிதியுதவியுடன் மண் பரிசோதனை மற்றும் விரிவான வடிவமைப்பு தயாரிப்புப் பணிகளை முடித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கட்டம் – I ஐ வெற்றிகரமாக செயல்படுத்தியதன் வாயிலாக கிடைக்கப்பெற்ற ஒட்டுமொத்த அனுபவத்தின் அடிப்படையில், மெட்ரோ நிலையங்களின் அளவினை சீரமைத்தல், நடைமேடை நீளம், காற்றுப் போக்கி அமைப்புகள் போன்றவற்றில் பல்வேறு புத்தாக்க வடிமைப்புகளை சட்டபூர்வமான அளவுகோலுக்கு குந்தகம் இன்றி அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புத்தாக்கங்கள் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருக்கும் ஏனைய மெட்ரோ இரயில் நிறுவனங்களால் பின்பற்றும் வகையில் அமைந்துள்ளது. அனைத்து நிலையங்களும், மாற்றுத் திறனாளிக்கு உகந்த வகையிலும் இந்திய பசுமை கட்டிட குழுமத்தின்

பசுமைக் கட்டிட அளவுகோலின் படியும், அதாவது சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.

மொத்த நீளமான 118.9 கி.மீ வழித்தடப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, சீராக முன்னேறி வருகின்றன. கட்டுமான காலத்தின் போது நகரக் குடிமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையிலும் பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்யும் வகையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

**பிற திட்டங்கள்**

**1. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம்–I இன் நீட்டிப்பு – விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை**

தமிழ்நாட்டின் தென்பகுதிகளின் நுழை வாயிலான ஜி.எஸ்.டி சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், உருவாகி வரும்

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்துவதற்கும் சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம் – 1 ஐ விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு / விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர்கள் ஏஇகாம் (M/s. AECOM) நிறுவனம் தயாரித்தளித்த விரிவான திட்ட அறிக்கை, இருதரப்பு / பன்னாட்டு வங்கிகளின் நிதியுதவிக்கு பரிந்துரைப்பதற்காக தற்போது மாநில அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**2. இரயில் வழித்தட இணைப்பு – தாம்பரம் முதல் வேளச்சேரி வரை**

தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான இரயில் வழித்தட இணைப்பிற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர்கள் சிஸ்ட்ரா (M/s. SYSTRA) நிறுவனம்

தயாரித்தளித்த சாத்தியக்கூறு அறிக்கை மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

**3. கோயம்புத்தூர் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டம்**

கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை / விரிவான திட்ட அறிக்கையை ஜெர்மானிய நாட்டின் நிதியுதவி முகமையான கே.எப்.டபுள்யூ–வின் (KfW) நிதியுதவியுடன் தயாரிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அறிக்கைகள் தயாரிக்கும் பணியினை திருவாளர்கள் சிஸ்ட்ரா (SYSTRA) மற்றும் ரைட்ஸ் (RITES) கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கைக்கு ஜூலை 2021ல் வழங்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆலோசகர்கள் இத்திட்டத்தை 3 கட்டங்களாக செயல்படுத்த பரிந்துரைத்துள்ளனர். இது குறித்து அங்குள்ள தொழில் நிறுவனங்களின்

பிரதிநிதிகள், நிறுவனங்கள், முக்கிய சங்கங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் போன்ற பங்குதாரர்களின் கருத்து கேட்பு கூட்டம் 01-04-2022 அன்று நடைபெற்றது. கட்டம்-IIற்கான விரிவான திட்ட அறிக்கை அரசின் ஆய்விற்காக விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**4) இரண்டாம் நிலை நகரங்களில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டம்**

**மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி** மற்றும் **திருநெல்வேலி**யில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்து திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகளை தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நகரங்களுக்காக ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கைகளின் அடிப்படையில் சாத்தியக் கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவ்வாறே மதுரைக்கான சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு மே

மாதத்தில் சாத்தியக்கூறு அறிக்கை பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டத்தை மேம்படுத்துதல் / தயாரித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
**நிதி மற்றும் மனிதவள**
**மேலாண்மை துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.